பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 14 புதன்கிழமை (26-04-2000) UTHAYAN - A Lively National Tamil Daily சுதிர்:129

## சமகாலத்தில் இராணுவ - அரசியல் பலம் கொண்ட சக்தியாக புலிகள்

# பேச்சுக்கள் தொடங்குவதற்கு முன் யாழ்ப்பாணத்தையும் பிடித்துவிடுவர்!



## ரணில் தெரிவிப்பு

சென்னை, ஏப்ரல்26

*** நோர்வே அரசின் உதவியுடன் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கு முன்னரே புலிகள் யாழ்ப்பாணத்தை முழுமையாகக் கைப்பற்றி விடுவர்.**

*** சமகாலத்தில் இராணுவ ரீதியிலும், அரசியல் ரீதியிலும் பலம் பெற்றுவிளங்கும் புலிகளின் கையே பேச்சுவார்த்தை மேசையில் ஓங்கியிருக்கும்.**

**எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.**

இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்றுக் காலை கொழும்பு திரும்புவதற்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க பி.பி.ஸிக்கு பேட்டியளித்தார். நோர்வே அரசின் உதவியுடன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னரே

(10ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் சமாதானம் அதுவே எங்கள் விருப்பம்

### ரணிலிடம் கருணாநிதி தெரிவிப்பு!

சென்னை,ஏப்.26

"இலங்கையின் யுத்தம் முடிவடைந்து சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதே தமிழக மக்களின் விருப்பமும் பிரார்த்தனையுமாகும்" என்று தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி தெரிவித்தார்.



இந்தியாவில் விஜயம் மேற்கொண்டிருந்த ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கருணாநிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சென்னையில் நேற்று முன்தினம் கருணாநிதியை ரணில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். ரணிலின் ஆலோசகரும் முன்னாள் இந்தியத் தூதுவருமான மகேந்திரனும் இச்சந்திப்பின் போது உடனிருந்தார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலமே தீர்வு காணப்பட வேண்டியது அவசியம். எனவே பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும் என்று கருணாநிதி ரணிலிடம் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக தீர்வைக் காண்பதே ஐ.தே.கவின் நிலைப்பாடாகும் என்றும் ரணில் கருணாநிதியிடம் தெரிவித்தார்.

தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதாவையும் ரணில் சந்தித்தார்.

(ஐ-3-7-8-9)

## ஆனையிறவுச் சிப்பாய்களின் நிலை அறிய உறவினர் கொழும்புக்குப் படையெடுப்பு!

கொழும்பு,ஏப்.26

ஆனையிறவு மற்றும் இயக்கச்சி முகாம்களில் பணிபுரிந்த படையினரின் நிலையை அறிவதற்காக தெற்கின் கிராமப் புறங்களில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட அவர்களது உறவினர்கள் கடந்த சில தினங்களாக கொழும்புக்கு படையெடுத்துவருவதாக செய்திகள் கிடைத்துள்ளன.

கொழும்புக்கு வந்துள்ள படையினரின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் இராணுவத் தலைமையகத்தையும், கொழும்பு ஆஸ்பத்திரியையும் முற்றுகையிட்டுள்ளனர்.

அவர்களில் ஆயிரம் பேருக்கான தங்குமிட வசதிகளை பௌத்தகாங்கிரஸ் செய்து கொடுத்துள்ளது. அவர்களுக்கு உணவு வசதி மற்றும் போக்குவரத்து உதவிகளையும் அந்த அமைப்புச் செய்து கொடுத்துள்ளது.

காயமடைந்த மற்றும் உயிரிழந்த படையினரின் விவரங்களைச் சேகரிக்கும் பணியைத் தமது அமைப்பு ஆரம்பித்துள்ளதாக அந்த அமைப்பின் தலைவர் சுசந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

வெண்தாமரை இயக்கமும் இவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கிவருகின்றது.

இந்த உதவிகளை வழங்குவதற்காக தனது மூன்று மாதச் சம்பளத்தை பிரதி நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் டிலான் பெரேரா வெண்தாமரை இயக்கத்திடம் வழங்கியுள்ளார்.

இதேவேளை-

காயமடைந்த படையினருக்கு உதவிப் பொருள்களை வழங்க விரும்புபவர்கள் அவற்றை கொழும்பில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் வழங்குமாறு அரசாங்கம் கேட்டுள்ளது.

(ஐ-க-3-7)

## புலிகளின் தாக்குதலால் கட்டுப்பாட்டுக் கோபுரம் வெடித்துச் சிதறியது!

### காயமடைந்த கோப்ரல் பேட்டி

கொழும்பு,ஏப்.26

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் படைத்தளத்தின் கட்டுப்பாட்டுக் கோபுரம் வெடித்துச் சிதறியது. அதனைத் தொடர்ந்து ஆனையிறவில் இருந்து எங்களை வெளியேறுமாறு படை உயர் அதிகாரிகள் உத்தரவிட்டனர். அதன்படி நாம் அங்கிருந்து முண்டியடித்துக் கொண்டு தப்பியோடினோம்.

ஆனையிறவுப் படைத்தளத்தைப் புலிகள் கைப்பற்றியதைத்தொடர்ந்து

(10ஆம் பக்கம் பார்க்க)

## 126 சடலங்களை புலிகள் ஒப்படைத்தனர்!

வவுனியா,ஏப்.26

ஆனையிறவுத்தளம் மீதான தாக்குதலின்போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ள படையினரின் சடலங்களில் 126 சடலங்கள், படை அதிகாரிகளிடம் கையளிப்பதற்காக வன்னியில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் நேற்று நண்பகல் 12-30 மணியளவில் ஒப்படைக்கப்பட்டன.

கிளிநொச்சியில் வைத்துப் பொறுப்பேற்கப்பட்ட இந்தச் சடலங்களை ஐந்தரை மணிநேரப் பயணத்தின் பின்னர் நேற்று மாலை வவுனியாவில் படை அதிகாரிகளிடம் ஒப்படைத்ததாகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் ஹர்ஷா குணவர்த்தனா தெரிவித்தார்.

இந்தச் சடலங்கள் அடையாளம் காணப்பட்டு, உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும்-

அடையாளம் காணமுடியாத சட

(10ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் எவருமே சரணடையவில்லை

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.26

ஆனையிறவுத் தளம் மீதான தாக்குதலின்போது எந்தவொரு சிப்பாயும் விடுதலைப் புலிகளிடம் சரணடையவில்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பாலித பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஆயிரக்கணக்கான படையினர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்ததாக வெளியான செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை என்று அவர் மறுத்தார்.

பாதுகாப்புத்தேடி மறைந்து இருக்கும் சிப்பாய்கள் விரைவில் படையினருடன் இணைவர் என்றும் அவர் கூறினார்.

(ஐ-க-3-9)

## வான்தாக்குதல்

கொழும்பு,ஏப்.26

ஆனையிறவுப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது நேற்று முழுநாளும் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பாலித பெர்னாண்டோ தெரிவித்தார்.

கிபிர் விமானங்களும், எம்.ஐ.24 ரக ஹெலிகளும் இந்தத் தாக்குதலை மேற்கொண்டன என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3-7-8)

## உணவு, மருந்து அனுப்பக்கோரி மல்லாவியில் ஆர்ப்பாட்டம்!

வவுனியா,ஏப்.26

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிக்கு மருந்து மற்றும் உணவுப் பொருள்களை அனுப்புமாறு கோரி மல்லாவியில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் பேரணி யோகபுரத்தில் ஆரம்பித்து மல்லாவிவரை நடத்தப்பட்டது. மல்லாவியில் இயங்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம், எம்.எஸ்.எவ்.மருத்துவக் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளிடம் மகஜர் கையளித்ததுடன் பேரணி முடிவடைந்தது.

ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்தப் பேரணியில் பங்குபற்றினர்.

### செம்மணி வழக்கின் சந்தேக நபர்களை

## கொழும்பு நீதிவான் முன் முற்படுத்துமாறு உத்தரவு

யாழ்ப்பாணம்,ஏப்.26

செம்மணி புதைகுழி விவகாரம் தொடர்பான சந்தேகநபர்களான படையினர் ஐவரையும் கொழும்பு பிரதம நீதிவான் முன்னிலையில் உடனடியாக முற்படுத்தி விளக்கமறியலில் வைப்பதற்கான கட்டளையை பெறுமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

செம்மணி விவகாரம் நேற்று யாழ்.நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோது இவ்வழக்கின் சந்தேகநபர்களைப் போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக மன்றுக்கு அழைத்துவர முடியவில்லை என்று குற்றப்புலனாய்வுப்பிரிவு பணிப்பாளரினால் யாழ். சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருக்குத் தகவல் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை யாழ்.பொலீஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரி நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## நளினிக்கு ஆயுள்தண்டனை

சென்னை,ஏப்.26

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட நால்வரில் ஒருவரான நளினியின் தண்டனையை, ஆயுள் தண்டனையாகக் குறைக்குமாறு தமிழக ஆளுநர் பாத்திமா பீபி ஜனாதிபதிக்கு சிபார்சு செய்துள்ளார்.

ஏனையோரின் மரணதண்டனையை உறுதிப்படுத்தி அவர் ஜனாதிபதிக்கு நேற்றுக் கடிதம் அனுப்பியுள்ளார்.

(ஐ-3-6-8)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## திரு.க.அருந்தவராஜா அவர்களது கல்வியுலகில் அர்ப்பணிப்பு

இவரும், இவரது சென்.ஜோன் அம்புலன்ஸ் படை உத்தியோகத்தர்களும் கடமை மட்டுமல்ல சகலவித விளையாட்டுக்களைப் பழக்குவதிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதில் திரு.க.அருந்தவராஜா அவர்கள் அணிநடைப் பயிற்சியை மிகத் திறம்படச் செய்வதை நாங்கள் அவதானித்து வருகின்றோம். இவரது கம்பீரநடை, தமிழ்க் கட்டளைச் சொற்கள், கடுமை, தொனி, அவரது உறுமல் என்பன மாணவர்களை இமை கூட வெட்டவிடாது செயற்பட வைக்கும்.

இவரது பரந்த குரலுக்கு மணி ஓசை எனும் பட்டம் சாலப் பொருத்தமானதே. இவரையும் இவரது படையினரையும் இப் புத்தாயிரமாம் நூற்றாண்டின் சேவையில் மேன்மேலும் ஓங்கி வளர உளமார வாழ்த்துகிறோம்.

அ.நடராஜசுந்தரம் (அதிபர்),
ஆசிரியர் குழாம், படை அங்கத்தவர்கள்.
*யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை.* (75768)

## வாழ்த்துகின்றோம்
### யா/கரணவாய் மகா வித்தியாலயம், கரவெட்டி.

| | | |
|---|---|---|
| 01. செல்வி பாமதி தணிகாசலம் | - | 8டீ 1சி 1எஸ் |
| 02. செல்வி விஜிதா கந்தசாமி | - | 5டீ 4சி |
| 03. செல்வன் ஐயாத்துரை ஜெயச்சந்திரன் | - | 4டீ 5சி 1எஸ் |
| 04. செல்வன் குலசிங்கம் தேவரூபன் | - | 4டீ 4சி 1எஸ் |
| 05. செல்வி துர்க்காம்பிகை சிவானந்தம் | - | 3டீ 3சி 2எஸ் |
| 06. செல்வி சுபாசினி மகாலிங்கம் | - | 2டீ 6சி 1எஸ் |
| 07. செல்வி மதுரா செல்லத்துரை | - | 1டீ 4சி 2எஸ் |
| 08. செல்வன கந்தசாமி சிறிஸ்காந்தருபமணி | - | 1டீ 3சி 4எஸ் |
| 09. செல்வி இராஜினி இராசரத்தினம் | - | 1டீ 5சி 2எஸ் |
| 10. செல்வன் சண்முகம் கங்காதரன் | - | 1டீ 4சி 3எஸ் |
| 11. செல்வி சுபாசினி விநாயகம் | - | 1டீ 4சி 2எஸ் |
| 12. செல்வன் நவரத்தினம் இராஜதீபன் | - | 6சி 2எஸ் |
| 13. செல்வி நளாயினிதேவி தாமோதரம்பிள்ளை | | 4சி 4எஸ் |
| 14. செல்வன் தங்கவேல் சிறீகாந்தன் | - | 3சி 5எஸ் |
| 15. செல்வி சர்மினி இரத்தினம் | - | 3சி 4எஸ் |

1999 டிசம்பர் க.பொ.த (சாதாரண) பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்ற யா/கரணவாய் மகா வித்தியாலய மாணவர்களையும் அவர்களது பெறுபேற்றுக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
(75758)

---

பிரத்தியேக வகுப்பு
G.C.E. O/L
**கணிதம்**
**28-04-2000**
**(வெள்ளி)**
மாலை 4.00 மணிக்கு
ஆரம்பமாகிறது
**செங்குந்தா வீதி,**
(பாடசாலை முன்பாக)
**கல்வியங்காடு**
(C/11960)

---

## ராஜா
யாழ்ப்பாணம்
*அஜித், ஷாலினி*
நடிப்பில்
**அமர்க்களம்**
காட்சிகள்
10.30, 2.30
(C/11604)

---

## நாகம்ஸ்
சுன்னாகம்
ரஜனி, சௌந்தர்யாவின்
*அருணாச்சலம்*
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
28 முதல்
**கண்ணுக்குள் நிலவு**
(75759)

---

## லிபேட்டி
அச்சுவேலி
மோகன், சந்திரசேகர்
நடித்த
**நினைக்கத் தெரிந்த மனமே**
(குடும்பச் சித்திரம்)
காட்சிகள்: 10.30, 2.30
T.P-070-212223
- 070-212678
FAX No. 0094 - 70212223
(75694)

---

## அறிவித்தல்
### உரிமை கோரப்படாத மாடு

இருபாலை கிழக்கு பிரதேசத்தில் கட்டாக்காலியாக பிடிக்கப்பட்டு நீண்டகாலமாக உரிமை கோரப்படாமல் மாடு ஒன்று உள்ளது. உரிமையாளர்கள் மூன்று நாள்களுக்குள் தகுந்த ஆதாரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

க. உமாகரன்
செயலாளர்

*விவசாய சம்மேளனம்,*
*இருபாலை கிழக்கு.*
(75743)

---

## ஆறாம் மாத நினைவலைகள்

தோற்றம்
27 - 03 - 1969



மறைவு
30 - 11 - 1999

### தாமோதரம்பிள்ளை கிருபாகரன்

பாசத்தின் அணையாத தீபமாய்
அன்புக்கு அடையாளச் சின்னமாய்
பண்பும் பரிவும் கொண்ட எந்தையே!
அறிவுடன் நேரிய வழி நிற்க
உறுதுணையாய் நின்றவரே - எம்
இதயக் கோயிலில் இடம் நிறுத்தித்
துதிப்போமாக.

பிரிவால் துயருறும்:
கி.சுதர்ஜினி (மனைவி),
கி.ஜதுஷா, கி.தாரகன், கி.விதுரா.
(பிள்ளைகள்)

*செல்லப்பிள்ளையார் கோயிலடி,*
*மட்டுவில் வடக்கு,*
*சாவகச்சேரி.*
(75762)

---

## மரண அறிவித்தல்கள்

### கபிரியேல் அன்ரனி பெர்னான்டோ
(இளைப்பாறிய அதிபர், மானிப்பாய் மெமோறியல்)

ஆக் வீதி, உடுவிலைச் சேர்ந்த கபிரியேல் அன்ரனி பெர்னான்டோ (இளைப்பாறிய அதிபர், மானிப்பாய் மெமோறியல்) அவர்கள் நேற்று (25-04-2000) செவ்வாய்க்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் கிறேஸ் பாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மரியராணி, இமெல்டா (ஜேர்மனி), ஒலின்டினா (D.A.M உடுவில் பிரதேச சபை), கசில்டா (நீர்ப்பாசனத்திணைக்களம், வவுனிக்குளம்) ஜெயராணி (லண்டன்), ஜெயராஜா (டென்மார்க்), கருணராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தகப்பனும் ரவீந்திரா (ஜேர்மனி), மரிசிலின், கருணசீலன் (நீர்ப்பாசனத்திணைக்களம்,வவுனிக்குளம்), சூரியகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற இராசதுரை, காலஞ்சென்ற மோசஸ் செபஸ்தியாம்பிள்ளை, பிரான்சிஸ் ஆகியோரின் அன்பு சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (27-04-2000) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மரிசிலின்
(மருமகன்)

*ஆக் லேன்,*
*உடுவில்.*
(75771)

### திருமதி சோமாவதிப்பிள்ளை கந்தையா
(நாரந்தனை)

நாரந்தனை கந்தசுவாமிகோயில் வீதியைச் சேர்ந்த திருமதி சோமாவதிப்பிள்ளை கந்தையா அவர்கள் நேற்று (25-04-2000) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் வி.சி.கோணேசபிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அதிபர் மூ.நா.கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் சாலினி (கொழும்பு), தேவன் இளங்கோ (லண்டன், முன்னாள் யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர்), கௌரி, திருமகள், சூலபாணி (வவுனியா), மன்றுளாடி (வவுனியா), செல்வி மாலினி (R.D.O., செட்டிகுளம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுந்தரமூர்த்தி (கணக்காளர், கொழும்பு), யோகலட்சுமி (லண்டன்), சச்சிதானந்தன் (கொழும்பு), தேவிகா (ஆசிரியை, வவுனியா), ராஜினி (ஆசிரியை, வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கோ.சிவபாதசுந்தரம் (இளைப்பாறிய பிரதமலிகிதர், யாழ்.மாநகர சபை), கோ.இராஜலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), வேதவதி ஆகியோரின் சகோதரியும் பத்மாசினி, பரமேஸ்வரி (ஆசிரியை), காலஞ்சென்ற இராஜேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் சாரங்கன் (லண்டன்), சயந்தினி (லண்டன்), விசாகி (மாணவி, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), அபிரிகா (வவுனியா), அபிசகன் (வவுனியா), மயூரிகா (வவுனியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-04-2000) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் 219/6, கடையிற்சுவாமி கோயில் வீதி, நாவலர் றோட், யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன்மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க.கௌரி (மகள்)
க.மாலினி (மகள்)
கோ.இராஜலிங்கம் (சகோதரன்)

*219/6, கடையிற்சுவாமி கோயில் வீதி,*
*நாவலர் றோட்,*
*யாழ்ப்பாணம்.*
(75765)

---

## யாழ்ப்பாணம் மாநகர சபை
## மீள் கேள்வி அறிவித்தல் - 2000

இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள இறைச்சிக்கடைகளை 01-06-2000 முதல் 31-12-2000 வரையான 06 மாத காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளராகிய என்னால் 10-05-2000ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பிணைப் பணமும், கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 250ம் செலுத்துவதன் பேரில் 09-05-2000ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிவரையும் யாழ் மாநகரசபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான படிவங்களில் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை யாழ். மாநகர சபையில் இதற்கென வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு 10-05-2000ஆம் திகதி பி.ப. 2.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு உடன் திறந்து ஆராயப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி எவரேனும் சமுகமளிக்க முடியும்.

### அட்டவணை

| இறைச்சிக்கடை விவரம் | கடை இல. | கேள்விப்பிணைப் பணம் | நிர்ணயித்த ஆகக் குறைந்த கேள்வி | மாத வாடகை |
|---|---|---|---|---|
| 01. குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 06 | 2500/= | 22100/= | 195/= |
| 02. குருநகர் ஆட்டிறைச்சிக்கடை | 07 | 2500/= | 4050/= | 195/= |
| 03. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை | 02 | 2500/= | 9250/= | 112.50 |
| 04. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 02 | 2500/= | 4500/= | 200/= |
| 05. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 05 | 2500/= | 3625/= | 200/= |
| 06. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 06 | 2500/= | 2625/= | 200/= |
| 07. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 07 | 2500/= | 4875/= | 200/= |
| 08. நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | 08 | 1500/= | 1875/= | 200/= |
| 09. பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | 01 | 2500/= | 24250/= | 135/= |
| 10. பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | 03 | 2500/= | 17750/= | 135/= |
| 11. செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | 01 | 2500/= | 32550/= | 112.50 |

குறிப்பு:- *தற்போது குத்தகை/வாடகை நிலுவைப் பணம் செலுத்த வேண்டியவர்களும், ஏற்கனவே தவறுநர் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களும் கேள்விப் படிவம் பெற அருகதையற்றவர்களாவர்.*

வே.பொ.பாலசிங்கம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

*மாநகர சபை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*24-04-2000*
(C/11963)

# பீஹார் சட்டசபையில் உறுப்பினர்கள் மோதல்!

பாட்னா, ஏப்ரல் 26

பீஹார் சட்டசபையில் எதிர்க்கட்சியினருக்கும் ஆளுங்கட்சியினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் பலர் காயமடைந்தனர்.

முதல்வர் ராப்ரிதேவி குறித்து எதிர்க்கட்சித் தலைவர் கூறிய சில கருத்துக்களைத் தொடர்ந்தே மேற்படி மோதல் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதலில் இருதரப்புச் சட்டமன்ற உறுப்பினர்களும் நாற்காலிகள் மற்றும் ஒலிவாங்கிகள் ஆகியவற்றால் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் தாக்கியதாகவும் கூறப்படுகிறது.

இந்த மோதலால் சட்டசபையில்நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்படவிருந்த பீஹார் மாநிலத்தைப்பிரித்து மற்றொரு மாநிலமாக கண்ர்ாஜட் மாநிலத்தை உருவாக்கும் பிரேரணை நேற்றே சமர்ப்பிக்கப்பட்டது.

[இ-6-9-ரி]

# அணு ஆயுத ஒழிப்புக்கு 7 நாடுகள் வலியுறுத்து

உலகின் அணு ஆயுத வல்லரசுகளாக உள்ள ஐந்து நாடுகளும் விரைவில் தம்மிடம் உள்ள அணு ஆயுதங்களை முற்றாக ஒழித்துவிட வேண்டும் என்று வலியுறுத்துவதற்காக 7 நாடுகள் இணைந்து புதிய கூட்டணி ஒன்றை அமைத்துள்ளன.

பிறேஸில், எகிப்து, அயர்லாந்து, நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா, சுவீடன், இத்தாலி ஆகிய நாடுகள் இணைந்தே இந்தப் புதிய கூட்டணியை உருவாக்கி உள்ளன. அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமான அணு ஆயுத பரவல் தடை தொடர்பான நான்கு வார மாநாட்டில் கலந்துகொள்ளும் இந்தக்கூட்டணி உலகில் இருந்து அணு ஆயுதத்தை முற்றாக ஒழிப்பதற்கு அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய ஐந்து அணுஆயுத வல்லரசுகளும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தும். (இ-6-9-ரி)

# இந்தோனேசிய அதிபரின் சொத்துக்கள் பறிமுதல்

ஜகார்த்தா, ஏப்ரல் 26

இந்தோனேசியாவின் முன்னாள் அதிபர் சுகார்ட்டோவின்சொத்துக்கள்அனைத்தையும் றிமுதல் செய்வதற்கு இந்தோனேசிய அரசு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகார்ட்டோ ஆட்சியில் இருந்தபோது அவரும் அவரது குடும்பத்தவர்களும் சேர்த்ததாகக் கருதப்படும் பல்வேறு வடிவிலான சொத்துக்களையும் பறிமுதல் செய்யும் பணி ஆரம்பமாகி உள்ளதாக ஜகார்த்தாவில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுவிஸ் வங்கிகளில் உள்ள சுகார்ட்டோவின் சொத்துக்கள் குறித்த விபரங்களைத் தருமாறும் இந்தோனேசிய அரசு சுவிஸ் அரசாங்கத்திடம் கோரி உள்ளது.

தற்போது சுகார்ட்டோ நீதிமன்ற அனுமதி இன்றி நாட்டை விட்டு வெளியேற தடைவிதிக்கப்பட்டுள்ளது.

(இ-6-9-ரி)

# அமெ. பள்ளிச் சிறுவர்கள் துப்பாக்கிப் பிரயோகம்!

## 8 பேர் படுகாயமடைந்தனர்

நியூயோர்க், ஏப்ரல் 26

அமெரிக்காவிலுள்ள தேசிய மிருகக்காட்சிச்சாலை ஒன்றில் இரு பள்ளிச்சிறுவர் குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் துப்பாக்கிச்சூட்டில் முடிந்ததில் 6 மாணவர்கள் உட்பட 8 பேர் படுகாயமடைந்தனர்.

அவர்களது நிலைமை மிக கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குடும்ப தினத்தைக் கொண்டாடிக்கொண்டிருந்த அமெரிக்க மக்கள் பெரும் எண்ணிக்கையில் மிருகக்காட்சிச்சாலையில் திரண்டிருந்த போது இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

அங்கு விளையாடிக்கொண்டிருந்த பள்ளிச் சிறுவர்களின் இரு குழுக்கள் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அது எல்லைமீறி இரு குழுக்களுக்கும் இடையில் மோதல் வெடித்தது. அப்போது சில சிறுவர்கள் தாம் மறைத்து வைத்திருந்த துப்பாக்கிகளை எடுத்து கண்மூடித்தனமாகச் சுட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகம் செய்த மாணவர்கள் தப்பி ஓடிவிட்டனர். அவர்களைத் தேடிப்பிடிக்கும் பணியில் பொலீஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து சிறுவர்கள் ஆயுதங்களைப் பயன்படுத்துவது குறித்துக் கடும் கண்டனம் எழுந்துள்ளது.

அண்மைக் காலமாகவே பள்ளிச் சிறுவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த வன்முறைச் சம்பவங்கள் அதிகமாக இடம் பெற்றுள்ளன. அவை குறித்து எழுந்த கண்டனங்களை அரசு உதாசீனம் செய்ததே அவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெற ஏதுவாக அமைந்துள்ளன என்று பல பொது அமைப்புகள் குற்றஞ்சாட்டி உள்ளன. (இ-6-ரி)

# 'மினி ஸ்கேர்ட்'டுடன் பெண்கள் ஆராதனைக்கு செல்லத் தடை

## கொலம்பிய மதகுரு அறிவிப்பு

பொகோடா, ஏப்ரல் 26

கொலம்பியாவின் பரன்குயிலா நகர தேவாலயம் ஒன்றில் ஈஸ்ரர் ஞாயிறு ஆராதனைகளில் கலந்துகொள்ளும் பெண்கள் குட்டைப்பாவாடை (மினி ஸ்கேர்ட்) அணியக் கூடாது என்று அந்த ஆலய மதகுரு அறிவித்துள்ளார்.

பெண்கள் குட்டைப் பாவாடைகளை அணிந்து வந்து இருக்கைகளில் அமரும் போது ஆராதனையில் ஈடுபடும் ஆண்களின் மனதை சபலப்படுத்துகின்றனர். எனவே குட்டைப்பாவாடை அணிந்துவரும் பெண்களை இனி ஞாயிறு ஆராதனைகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப் போவதில்லை என்று அந்த ஆலயத்தின் மதகுருவான குளோடாரியோ தெரிவித்துள்ளார். இந்த நடைமுறை தொடர்ந்து கடுமையாக அமுல் செய்யப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

கொலம்பியாவில் எப்போதும் வெப்பம் அதிகமாக இருப்பதன் காரணமாக அங்குள்ள பெண்கள் குறைந்தளவு உடைகள் அணிவதையே விரும்புகின்றனர். ஆகையால் மதகுருவின் இந்த அறிவிப்புக்கு அவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். குட்டைப் பாவாடை அணிவதன் மூலம் எவருக்கும் எந்த இடைஞ்சலும் ஏற்படாது என்றும் அவர்கள் கூறிவருகின்றனர்.

(இ-6-9-ரி)

## பெரிய வெள்ளி தினத்தில்

# பதினொரு கிறிஸ்தவர்கள் சிலுவையில் அறையப்பட்டனர்!

## பிலிப்பைன்ஸ் கிராமத்தில் சம்பவம்

மணிலா, ஏப்ரல் 26

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இருந்து 50 மைல் தூரத்தில் உள்ள கட்டட் என்ற கிராமத்தில் பெரிய வெள்ளியையொட்டி நடந்த சம்பிரதாயச் சடங்கு ஒன்றில் 11 கிறிஸ்தவர்கள் இயேசுவைப் போன்று தம்மை மரச்சிலுவைகளில் ஆணி அடித்துப் பிணைத்துக் கொண்டனர்.

நேர்த்திக் கடன் கழிப்பதற்காகவே அவர்கள் இவ்வாறு செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ஆண்டுதோறும் பெரிய வெள்ளியையொட்டி இவர்கள் இந்த மதச் சடங்கைச் செய்து வருவதாகவும் கூறப்பட்டது.

சுமார் 7.5 சென்ரி மீற்றர் நீளமான இரும்பாணிகளைக் கொண்டு அவர்கள் தமது கைகளையும் கால்களையும் சிலுவையில் அறைந்து கொண்டனர். 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்தக் காட்சிகளைக் கண்டனர். ஆணியை அடித்த போது அவர்களின் உடலில் இருந்து சிதறிய இரத்தம் தம்மேல் படுவதை பார்வையாளர்கள் புனிதமாகக் கருதினர்.

பிலிப்பைன்ஸ் கத்தோலிக்க திருச்சபையின் ஒப்புதல் இன்றியே இந்தச் சடங்கு செய்யப்பட்டு வருவதாகக் கூறப்பட்டது. (இ-6-9-ரி)

# பொஸ்னியாவில் முஸ்லிம்களின் மற்றொரு புதைகுழி கண்டுபிடிப்பு

பெல்கிரேட், ஏப்ரல் 26

பொஸ்னியாவில் 1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற இன ஒழிப்பு நடவடிக்கையின் போது சேர்பியப் படையினரால் கொன்று புதைக்கப்பட்டதாகக் கருதப்படும் மற்றுமொரு மனிதப் புதைகுழியை சர்வதேச விசாரணையாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்

இந்தப் புதைகுழியில் 47 வரையான சடலங்களின் எச்சங்கள் இருக்கலாம் என்று சட்ட வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஷரத்பேகா நகருக்கு அருகே இருந்து கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் புதைகுழியில் உள்ள சடலங்களின் எச்சங்கள் சுமார் 4 அல்லது 5 வருடங்களுக்கு முற்பட்டவை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இன ஒழிப்பு நடவடிக்கையில் பொஸ்னிய சேர்பியப் படையினர் தீவிரமாக ஈடுபட்டிருந்த சமயம் அதற்குப் பயந்து பொஸ்னியாவில் இருந்து குறோஷியாவுக்குத் தப்பிச் சென்ற சமயம் இந்த முஸ்லிம்கள் படையினரால் கொல்லப்பட்டிருக்கலாம் என்று விசாரணையாளர்கள் கருதுகின்றனர்.

பொஸ்னிய சேர்பியர்களின் இந்த இன ஒழிப்பு நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட 2 ஆயிரத்துக்கும் அதிகமான பொஸ்னிய முஸ்லிம்களின் எச்சங்கள் இதுகுறித்து விசாரணை செய்யும் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையாளர்களால் இது வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது (இ 6 9-ரி)

# உலக அரங்கில்

## கைதிகளின் உரிமைகளைப் பேணுக

சென்னை, ஏப்ரல் 26

தமிழகத்தில் நீதிமன்றங்களுக்கு விசாரணைகளுக்காக கைதிகளை அழைத்து வரும் போதுகைவிலங்கு போடுவது, அவர்களைஅரைநிர்வாணமாகக் கூட்டிவருவது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று தமிழக மனித உரிமைகள் ஆணைக்குழு பொலீஸ் இயக்குநரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

கைதிகளின் உரிமைகளை உதாசீனம் செய்யும் பொலீஸார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அது கூறியுள்ளது. (இ-6-9-ரி)

# ஆபிரிக்காவில் நாளொன்றுக்கு 2,500 பேர் மலேரியாவுக்குப் பலி!

## உலக சுகாதார நிறுவனம் அறிக்கை

ஆபூச்சா, ஏப்ரல் 26

ஆபிரிக்காவில் வருடம் தோறும் 10 லட்சம் பேரைப் பலிகொள்ளும் மலேரியாக் காய்ச்சலைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக ஆலோசனை நடத்துவதற்காக உலக சுகாதார நிறுவனத்தின் ஏற்பாட்டில் நைஜீரியத் தலைநகர் ஆபூச்சாவில் ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் ஒருநாள் மாநாடு ஒன்றை நடத்தியுள்ளனர்.

இந்த மாநாடு தொடர்பாக உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆபிரிக்க நாடுகளில் 2 ஆயிரத்து 500 பேர் ஒவ்வொரு நாளும்மலேரியாக்காய்ச்சலுக்குப் பலியாகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் என்பது மிகவும் துயரமானது. ஆபிரிக்காவில் நிலவும் சுகாதாரக் கேடு, மாறிவரும் சூழல், மருத்துவக் குறைபாடு மற்றும் மலேரியாவைப் பரப்பும் நுளம்புகள் அவற்றுக்கு எதிரான மருந்துகளுக்கு இசைவாக்கம் அடைவது ஆகியவையே இந்தளவுக்கு மலேரியா நோய் பரவுவதற்குக் காரணம் — என்றுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள், மலேரியா நோய்க்கு ஆபிரிக்காவிற்கு ஏற்ற சிறந்த தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்துத் தருமாறு மேற்குலக நாடுகளுக்கும் மருந்துத் தயாரிப்பு நிறுவனங்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(இ-ரி)

# இந்தியாவின் பல மாநிலங்களில் வரட்சிநிலைமை மோசமடைகிறது

இந்தியாவில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியினால் பாதிப்படைந்துள்ள மாநிலங்களில் எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்து விவாதிப்பதற்காகப் பிரதமர் வாஜ்பாய் நேற்று அனைத்துக்கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டினார்.

இந்தக் கூட்டத்தில் பாதிக்கப்பட்டோருக்கு வரட்சி நிவாரணம், வழங்குவது உட்பட முக்கிய நடவடிக்கைகள் குறித்துதீர்மானிக்கப்பட்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேசமயம் இந்தியாவின் சில மாநிலங்களில் தற்போது நிலவிவரும் இந்த வரட்சி மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

வரட்சி நிலவும் பிரதேசங்களில் பாரிய நீர்த்தேக்கங்கள் உட்பட நீர் நிலைகள் அனைத்தும் முற்றாக வற்றிவிட்டதால் மக்கள் அப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து வருகிறார்கள்.

அவர்கள் தமது ஆடு, மாடு போன்ற கால் நடைகளை கைவிட்டுச் செல்கின்றனர் என்றும்—

இப்படிக் கைவிடப்பட்ட சுமார் 200 ஆடுகள் உண்பதற்கு ஏதுமின்றி நச்சுப் புல்லைத் தின்றதால் ஒட்டு மொத்தமாக மடிந்தன என்றும்— தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அரசு கால் நடைகளுக்கான பாதுகாப்பு முகாம்களை ஆரம்பித்துள்ளது. (இ-6-ரி)

## தாக்குதல்

உத்தரப் பிரதேசத்தில் ஆக்ராநகர் அருகே புனித வெள்ளியை முன்னிட்டு ஆராதனைகளில கலந்து கொள்ளச் சென்ற கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்திய கும்பல் ஒன்று பைபிளின் சில பக்கங்களையும்தீயிட்டுஎரித்துள்ளது

# 2 ஆம் கட்ட பாட நூல்கள் வடமராட்சியில் விநியோகம்

வடமராட்சி, ஏப்ரல் 26

வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இரண்டாம் கட்டமாக இலவச பாட நூல்கள் நேற்று முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

மருதங்கேணி கல்விக் கோட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த பாடசாலைகளின் அதிபர்கள் உட்பட அனைத்துப் பாடசாலை அதிபர்களும் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக வடமராட்சி கல்வி வலய அலுவலகத்துக்கு நேரில் வந்து இலவசப் பாட நூல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா தெரிவித்துள்ளார்.

இரண்டாம் கட்டமாக வந்து சேர்ந்துள்ள இலவசப் பாட புத்தகங்களில் பத்தாம் தரத்துக்கான விஞ்ஞானமும் தொழில் நுட்பமும், சமுகக் கல்வி, ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கானபாடப் புத்தகங்கள் வந்து சேரவில்லை. முதலாம் கட்ட இலவசப்பாட புத்தகங்களிலும் இப் பாட நூல்கள் அடங்கி இருக்கவில்லை. இப்பாடப் புத்தகங்கள் இன்மையால் பத்தாம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களும் பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளார்கள். (இ-173)

## நடமாடும் சேவை

நெல்லியடி, ஏப்ரல் 26

வடக்கு - கிழக்கு மாகாண காணி நீர்ப்பாசன கடற்றொழில் அமைச்சின் பணிப்பின் பேரில், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் கிராம மட்ட நடமாடும் சேவை இம் மாதம் 30 ஆம் திகதி கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது. (இ-109)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

கல்வி, உயர்கல்வி அமைச்சும் தேசிய கல்வி நிறுவகமும் இணைந்து யாழ் மத்திய கல்லூரியில் நடத்தவிருக்கும் கணனிப் பரீட்சைக்கான விண்ணப்ப திகதி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எஸ். இராஜதுரை அறிவித்துள்ளார். (க-10)

# யாழ். நகர்மைய றோட்டறக்ட் 2.ம் கட்டமாக உதவி வழங்கியது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

தற்போது இடம்பெற்று வரும் யுத்தத்தால் இடம்பெயர்ந்து தென்மராட்சியிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு யாழ் நகர்மைய றோட்டறக்ட் கழகம் இரண்டாம் கட்டமாக உலர் உணவு உடுபுடைவைகள், பால்மா வகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் என்பவற்றை நேற்று முன்தினம் வழங்கியது.

இந்தச் செயற்பாட்டுக்கு யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகத்துடன் யாழ். ன்ரறக்ட் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றுடன் இன்ரறக்ட் கழகங்களும் இணைந்து செயற்பட்டன.

யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளில் உள்ள மக்களிடம் சேகரிக்கப்பட்ட பெரும் தொகையான உலர் உணவுகள், உடுபுடைவைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் என்பனவே நேற்று முன்தினம் மிருசுவில் மற்றும் கொடிகாமம் பகுதிகளில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டன.

இவர்கள் மூன்றாம் கட்டமாக நாளை மேலும் ஒரு தொகுதி பொருள்களை அப்பகுதிக்கு கொண்டுசென்று விநியோகிக்கவுள்ளார். (இ-4)

# சமாதானமும் சுபீட்சமும் மலர இறைநம்பிக்கை தேவை

## நல்லை ஆதீன முதல்வர் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

வரலாற்றுச்சிறப்பு மிக்க நவாலி அட்டகிரி கந்தசாமி கோயில் மகா கும்பாபிஷேகம் காண்பதற்கு நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும். தேவாரம் பாடிய திருஞானசம்பந்தப்பெருமான் தமது திருப்பதிகத்தில் கூறியது போல "பெருஞ் சாந்தி காணாது போதியோ பூம்பாவாய்" என்ற வரிகள் இங்கே நினைவு கூரத்தக்கன. பிறவி எடுத்த பயனை இன்று நாம் அடைந்து விட்டோம். நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் நிலவ மக்களிடம்இறைநம்பிக்கை தேவை. அதனை வளர்த்துக் கொள்ள ஒவ்வொருவரும் பழக வேண்டும்.

நவாலி அட்டகிரி கந்தசுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம் கடந்த திங்கட்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

இக்கும்பாபிஷேக விழாவில் கலந்து அருளாசி வழங்கிய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தமது அருளாசியில் மேலும் குறிப்பிட்டதாவது:-

கலியுகவரதனாம் கந்தப் பெருமான் தம்மை வழிபடும் அடியார்களின் இன்னல் போக்கி, இடுக்கண் களைந்து அருள் மழைபொழிந்த வண்ணம் இந்த நவாலி அட்டகிரியிலே கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கிறார். இங்கு திருச்செந்தூர் ஆலய மரபுகள் பின்பற்றப்படுகின்றன —என்றார்.

கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்த பிரதிஷ்டா சிரோன்மணி நவாலியூர் கிரியாகலாநிதி சாமி விஸ்வநாதக் குருக்கள் ஆசியுரையில் — ஒருமனதுடன் எல்லோரும் சேர்ந்து வழிபட்டால் முருகன் நிச்சயம் நமக்கெல்லாம் அருள் சுரப்பான். இந்த நவாலி அட்டகிரி முருகன் ஆலய கும்பாபிஷேகம் நமக்கெல்லாம் கிடைத்தற்கரிய ஒரு வரப்பிரசாதம். இதனால் நவாலி அட்டகிரி மண்ணுடைய விசேஷம் மகிமையுடையதாக மிளிர்கின்றது — என்றார்.

பரோபகாரமணி கே. கே. சுப்பிரமணியம் தனதுரையில்: —

ஆயிரம் பிறைகண்ட மகான்கள் அவதரித்த பெருமை இந்த நவாலி அட்டகிரி மண்ணுக்கு உண்டு. இந்தக் கந்தசுவாமி ஆலயம் இன்று கும்பாபிஷேகம் காண்பது நமக்கெல்லாம் பெருமை தரக்கூடிய ஒன்று. இங்குள்ள நமது சிவாச்சார்யர்களோடு தமிழகம் — தாம்பரம் முத்துக்குமாரசாமிக் குருக்கள் வந்து சிறப்பித்தமை வரவேற்கப்பட வேண்டும். அவர்களது காலடிபட்ட இடம் மிகவும் மகிமை மிக்கது - என்றார்.

நவாலியூர் கிரியாகலாநிதி சாமி. விஸ்வநாதக் குருக்கள், தாம்பரம் முத்துக்குமாரசாமிக் குருக்கள், ஈழத்துச் சிவாச்சார்யர்கள் பலரும் ஒன்று சேர்ந்து நடத்தப்பெற்ற இந்தக் கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

பிரதம சிவாசார்யாரான சாமி விஸ்வநாதக் குருக்கள் பொன்னாடை போர்த்தி, பொற்கிழிவழங்கிக்கௌரவிக்கப் பெற்றார் கும்பாபிஷேகத்துடன் தொடர்புடைய பலரும் இவ்விழாவில் பாராட்டப்பட்டனர். (இ)

## சமய சந்நிதிகளில்

செல்வச்சந்நிதி மௌனகுரு (முருகுப்பிள்ளை சுவாமிகள்) கடவுள் சுவாமிகளின் 94 ஆவது ஜெயந்திதினம் நாளை வியாழக்கிழமை கொண்டாடப்படும்.

உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் செல்வி மலர் பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இக் கொண்டாட்டத்தில் காலை 9-00 மணி முதல் விசேட பூசைகளும், பஜனை, ஆராதனைகளும் இடம்பெற்று நிறைவாக மகேஸ்வர பூசையும் நடைபெறும். (ஐ-15

★ ★ ★

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் பதினேழாம் ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்குத் தேர்த் திருவிழாவுக்கு மறுநாள் காலை 9மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

★ ★ ★

நாவாந்துறை புனித நீக்கிலார் தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து ஏழுநாள்கள் நடைபெறும் திருவிழாவில் தினசரி ஆலய பங்குத்தந்தை பீற்றர் துரைரட்டினம் அடிகளார் தலைமையில் பிற்பகல் 5 மணி முதல் 6 மணி வரை திருப்பலிப் பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

எதிர்வரும்வெள்ளிக்கிழமை மாலை 5 மணி முதல் 8 மணி வரை நற்கருணைப் பவனியும், மறுநாள் சனிக்கிழமை காலை 6.30 மணிக்குத் திருநாள் பாடல் பூசையும், திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (க-30)

★ ★ ★

சாவகச்சேரி நகர் ஆவரஞ்சாட்டி ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும்.

அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி சங்காபிஷேகத்துடன் உற்சவம் நிறைவு பெறும். (க-117)

★ ★ ★

இளவாலை புனித நீற்றம்மாள் தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலிப் பூசை வழிபாட்டுடன் நடைபெறும். (க-30)

# செய்திக் கொத்து

## மிளகாயில் எரிகுருமன் நோய்த் தாக்கம்

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் விவசாயிகளினால் நடுகை செய்யப்பட்ட மிளகாய்ச் செடிகள் எரிகுருமன் நோய்த் தாக்கத்திற்குள்ளாகியுள்ளன.

தற்போது மிளகாய்ப்பழ அறுவடையை படிப்படியாக மேற்கொண்டுவரும் விவசாயிகள், மேற்படி நோய்த்தாக்கம் காரணமாக மிளகாய்ச் செடிகள் பட்டுப்போவதால் பெரிதும் நஷ்டம் அடைந்துள்ளனர். (ஐ-133)

## இரவுக் காவல் பணி

சங்கானை, ஏப்ரல் 26

சங்கானை வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டின் சங்கானைச் சந்தை, வர்த்தக நிலையங்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, இரவு நேரக் காவல் பணிக்கு ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சங்கானையில் அமைந்திருந்த பாதுகாப்புப்படையினரின் முகாம் மூடப்பட்டதால், இப்பகுதியில் திருடர்களின் கைவரிசை ஓங்கிவருவதாலேயே இந்த ஏற்பாட்டை வர்த்தக சங்கத்தினர் மேற்கொண்டுள்ளனர். (க-24)

## ச ச. நிலைய பொதுக் கூட்டத்தை நடத்த அறிவுறுத்து

கொழும்புத்துறை ஏப்ரல்26

இந்த நடப்பு ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டத்தையும், புது வருட உத்தியோகத்தர் தெரிவையும் நடத்தாமல் இருக்கும் சனசமூக நிலையங்கள் அவற்றை விரைவில் நடத்தி அதன் விவரங்களை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளன.

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்களத்தின் தலைமைச் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தனேஸ்வரி பாஸ்கரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக சனசமூக நிலையங்களின் சமாஜம் அமைப்பதற்கும். சம்மேளனம் அமைப்பதற்கும் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு விவரம் அவசியம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-30)

## கௌரவிப்பு

நெல்லியடி, ஏப்ரல் 26

அல்வாய் சாமணந்தறை அருள்மிகு பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவ காலத்தில் சமயாசாரப்படி கிரியைகளை மேற்கொண்ட மேற்படி ஆலய பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ தியாக. சோமஸ்கந்தராஜக் குருக்கள் ஆலய பரிபாலன சபையினரால் தங்கப்பதக்கம் சூட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவ் வைபவம் பரிபாலன சபைத் தலைவர் இ. சதானந்தம் தலைமையில் நடைபெற்றது. (க)

## சைக்கிள் திருட்டு

சண்டிலிப்பாய்.ஏப்ரல்26

வட்டுக்கோட்டையிலுள்ள அரைக்கும் ஆலை (மில்) ஒன்றின் முன்பாக விடப்பட்டிருந்த லுமாலா சைக்கிள் ஒன்று கடந்த வாரம் திருடப்பட்டுள்ளது. (க-135)

## ஜூஸ் பைக்கெட்

சங்கானை, ஏப்ரல் 26

சங்கானை, சித்தங்கேணிப்பகுதியில் விற்பனை செய்யப்படும் ஜூஸ்பைக்கெட்டுக்களில் பாவனைக் காலம் 30—04—2000 என எழுதப்பட்டுள்ளதாம்.

இந்த ஜூஸ் பைக்கெட்டுக்கள் கடந்த 22 ஆம் திகதி முதல் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிய வருகிறது.

இரண்டொரு தினங்களே ஜூஸ் பைக்கெட்டுக்களை குளிரூட்டி வைத்திருக்கலாம்.

அதற்கு மேல் வைத்திருப்பது சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

## போட்டோப் பிரதி இயந்திரம் பழுது

வலி. தென்மேற்கு.

ஏப்ரல் 26

வலி. தென்மேற்கு-மானிப்பாய் பிரதேச சபையின் போட்டோப் பிரதி இயந்திரம் பழுதடைந்து இரண்டு மாதமாகியும் திருத்தப்படவில்லை.

இதனால் அலுவலக வேலைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-185)

## கைதானவர் விடுவிப்பு

திருநெல்வேலி, ஏப்ரல் 26

கடந்த சனியன்று கந்தர்மடம் குமாரசாமி வீதியிலுள்ள வீட்டில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பத்மநாதன் கார்த்திக் என்ற 21 வயது இளைஞர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நண்பகல் விடுவிக்கப்பட்டார். (இ-135)

## கைதான மூவர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

குடாநாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வைத்து இராணுவத்தால் கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்கள் விசாரணைகளின் பின்பு விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று அவர்களின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமாரசாமி வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த பத்மநாதன் கார்த்திக் (வயது 21), யாழ். ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த சின்னராசா அன்ரனி ஆம்ஸ்ரோங்(வயது 31) கச்சேரி வீதி, சுண்டுக்குழியைச் சேர்ந்த சுப்பிரமணியம் செந்தூரன் (வயது 22) ஆகிய மூவருமே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 22ஆம்திகதி 512 ஆவது படையணிஇராணுவத்தால் கைது செய்யப்பட்ட மூவரும் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# கைதடியில் இடம்பெற்ற நடமாடும் செயலக சேவை

## பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டது

கைதடி, ஏப்ரல் 26

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவின் நடமாடும் செயலகச் சேவை நேற்று முன்தினம் கைதடி மேற்கு இணுங்கித் தோட்டம் கந்த சுவாமி ஆலயக் கல்யாண மண்டபத்தில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை பிரதேச செயலர் பு சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்த நடமாடும் செயலகச் சேவையின்போது சகல திணைக்கள, செயலக அதிகாரிகளும் கைதடியில் உள்ள ஆறு கிராம சேவையாளர்களும் தமது அதிகாரங்களுக்கு உட்பட்ட பிரச்சினைகளை உடனுக்குடன் கலந்துரையாடி இனங்கண்டு தீர்த்து வைத்தனர்.

தீர்வு காணப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு

★ சமுர்த்தி நிவாரணம் தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்டன.

★ காலங்கடந்த பிறப்பு, இறப்புகள் பதிவு செய்யப்பட்டன.

★ அரச காணிகளில் குடியிருப்போருக்கு உறுதிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

★ அங்கவீனருக்கு மூன்று சக்கரவண்டிகள் வழங்கச் சிபார்சு செய்யப்பட்டது. பொதுசன மாதாந்த உதவிப் பணம் வழங்குவது தொடர்பான நடவடிக்கை எடுக்க ஆலோசனை வழங்கப்பட்டது.

★ காலங்கடந்த திருமணப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

★ மழை நீர் பாயும் பூதம்பத்தை அம்பத்தை வாய்க்கால்களைப் புனரமைக்க பிரமாண அடிப்படையில் 50 ஆயிரம் ரூபாவும் பிரதேச சபை மூலம் 15 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டது.

★ அரச காணிகளில் அத்துமீறிக்குடியேறிய — 1979 ஆம் ஆண்டு விசாரணைகள் முடிந்தவர்களுக்கு — உத்தரவுப் பத்திரம வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

★ கணவர் காணாமல் போன, மூன்று பிள்ளைகளின் தாயாருக்கு உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

★ கைதடிமேற்கு மக்களுக்கு குடி தண்ணீர் வழங்குவது சம்பந்தமான நடவடிக்கை எடுக்கச் சிபார்சு செய்யப்பட்டது.

மற்றும் பொது மலசல கூடம் அமைத்தல், வேலை வாய்ப்பு, இடம்பெயர்தோர் நிவாரணம், விவசாய அபிவிருத்தி, கால்நடை வளர்ப்பு, பால் சந்தைப்படுத்தல், அடையாள அட்டைகள் வழங்கல் சம்பந்தமான மக்களின் பல்வேறு பிரச்சினைகள் இனங்காணப்பட்டுத் தீர்வுக்குச் சிபார்சுகள் செய்யப்பட்டன. (இ-74)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை கலை வட்டத்தின் ஏற்பாட்டில் ''விவாதகள அரங்க அளிக்கையும் அதன் அழகியல் பிரச்சினைகளும்'' எனும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (ச)

# புறநானூற்றைப் புதுப்பிப்போர் ஈழத்தின் தமிழ் வீரர்களே!

## சுப வீரபாண்டியன் தெரிவிப்பு

சென்னை, ஏப்ரல் 26

''தமிழ்நாட்டில் நாங்கள் ஆண்டு தோறும் புறநானூற்றைப் படிப்பிக்கின்றோம் ஆனால் ஈழத்து வீரர்கள் தான் அதனைப் புதுப்பிக்கின்றார்கள்.''

இவ்வாறு தமிழகத் தலைவர்களில் ஒருவரான சுபவீரபாண்டியன் தெரிவித்தார்.

சென்னையில் இருந்தவாறு ஆனையிறவு இராணுவத் தளம் புலிகளிடம் வீழ்ச்சி அடைந்தது குறித்து லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் தமிழ் வானொலி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆனையிறவுத் தளம் வீழ்ச்சி அடைந்தது குறித்த இந்த மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் உலகிலுள்ள அனைத்துத் தமிழர்களுடனும் பகிர்ந்து கொள்கிறேன்.

கும்பகோணத்தில் ஒரு கூட்டத்தில் பேசிமுடித்துக்கொண்டிருந்த போதே எனக்கு இந்தச் செய்தி கிடைத்தது. அப்போது கூட்டம் முடிவடைந்து மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தனர்.

உடனே நான் ஒரு நிமிடம் எல்லோரும் அப்படியே நில்லுங்கள் என்று சொல்லிவிட்டு நண்பர்கள் ஓர் இனிப்பான செய்தி கொண்டு வந்துள்ளனர் என்று கூறி அந்த வெற்றிச் செய்தியைப் படித்தேன்.

நான் செய்தியைப் படித்து முடிக்கு முன்னரே அந்த அரங்கம் அதிர்ந்தது. மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடியது.

அந்த மகிழ்ச்சியை என்னால் மறக்கவே முடியாது. ஆனந்தக் கண்ணீருடன் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு ஒரு பெரும் மகிழ்ச்சிக் கூத்தாட்டம் அந்த அரங்கத்தில் நிகழ்ந்தது. அது அடங்கவே சுமார் 10 நிமிடங்கள் ஆகியது.

எனவே தமிழ்நாட்டில் மக்களிடம், தமிழ் உணர்வாளர்களிடம் மிகப்பெரிய மகிழ்ச்சிப் பேரலையை இந்த வெற்றிச் செய்தி கொண்டு வந்துள்ளது. என்பதில் சந்தேகமில்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாக கும்பகோணத்தின் நிகழ்ச்சி அமைந்திருந்தது என்றுதான் நான் கருதுகின்றேன்.

தமிழ் நாட்டின் பல செய்தித் தாள்களில் இந்தச் செய்தி தலைப்புச் செய்தியாக இடம்பெற்றுள்ளது.

### எங்கு பார்த்தாலும் வெற்றிக் களிப்பு

ஆங்கிலப் பத்திரிகையான இந்துப் பத்திரிகையில் மட்டும் கடும்போர் நடந்து கொண்டிருக்கிறது என்று செய்தி வெளியாகி இருந்தது. தினமணிபத்திரிகையில் ''ஆயிரம் இராணுவ வீரர்கள் பலி; புலிகள் வீரத் தாக்குதல்'' என்று தலைப்புச் செய்தி வெளியாகி உள்ளது.

தமிழ் நாட்டில் எங்குபார்த்தாலும் இந்த வெற்றி தமிழ் இன உணர்வாளர்கள் மத்தியில் பரவி உள்ளது. பொதுவாக மக்கள் மத்தியில் 'புலிகள் இனி வெல்வார்கள் அவர்களை எவராலும் அடக்க முடியாது என்கிற எண்ணம் வந்துள்ளது.

தொலைக்காட்சியில் இராணுவ விமர்சகர்கள் இந்த வெற்றி குறித்து விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனையிறவை புலிகள் கைப்பற்றிய பின்னர் யாழ். குடாநாட்டை கைப்பற்றுவது என்பது ஏறக்குறைய முடிந்து போன மாதிரித்தான். பலாலியையும் வென்றுவிட்டார்கள் என்றால் ஏறத்தாழ யாழ்த்தின் பெரும்பகுதி புலிகள் வசம் வந்து விடும். திருகோணமலை மட்டும்தான் இனி மிச்சம் என்ற விமர்சனங்கள் இன்று வந்து கொண்டிருக்கின்றன.

நான் கூறுகின்றேன் திருகோணமலையும் நம் வசமாகும். வவுனியாவும் நம் வசமாகும். தமிழீழம் கண்ணுக்கு எட்டிய தூரத்திலேயே இருக்கின்றது.

தமிழகத்திலே பொதுவாக இவ்வாறான செய்திகளை முடிந்த வரையில் மூடிமறைப்பது இங்கே இருக்கும் ஊடகங்களின் வழக்கம். ஆனால் இந்த முறை அது எடுபடவில்லை.

நான் இந்தச் செய்தி கிடைத்தபோது அந்தக் கூட்டத்தில் பேசும் போது கூட சொன்னேன், அகமும் புறமும் தமிழன் வாழ்வின் இரு பகுதிகள். அந்தி சாய்ந்தால் அகநானூறும், பொழுது விடிந்தால்புற நானூறும் என்பது தான் சங்க இலக்கியம் நமக்குச் சொல்லித் தந்திருக்கும் பாதை.

அதிலும் கூட நான் சொன்னேன் நாம் ஆண்டு தோறும் புற நானூற்றைப் படிப்பிக்கின்றோம். ஆனால் ஈழத்து வீரர்கள்தான் அதனைப் புதுப்பிக்கிறார்கள் என்று —

புதிய புறநானூறு ஒன்றை இந்த மாவீரர்கள் இப்பொழுது படைத்திருக்கிறார்கள். நாம் காலமெல்லாம் ஒரு பழைய புறநானூற்றை வைத்து பழம் பெருமை பேசிக் கொண்டிருந்த நேரங்களில் இதோ புதியபுறநானூறு ஒன்றுக்கு ஓர் அற்புதகளனாக இந்தப் போர்க்களம் அமைந்துள்ளது.

இராணுவத்தை — அதுவும் அமெரிக்காவிடம் பயிற்சி பெற்ற இராணுவத்தை— மேற்கு நாடுகள் பலவற்றின் ஆயுதங்களைக் கொண்டு வந்து குவித்து அதன் மூலம் போராடிக் கொண்டிருக்கும் இராணுவத்தை — இப்படித் தலை தெறிக்க ஓடவைத்திருக்கும் அந்த மாவீரர்களின் மாவீரம் கண்டு நான் தலை வணங்குகின்றேன்; மெய் சிலிர்க்கிறேன்.

இந்த வெற்றியானது 240 ஆண்டுகள் அடிமைப்பட்டுக் கிடந்த தளத்தை மீட்டெடுத்த பெருமையைக் கொண்டது. தங்களின் சொந்தப் போர்த்திறனால், தமது நெஞ்சுரத்தால் ஓர் இராணுவத்தை புலிகள் வென்றிருக்கும் இந்தச் செய்தி உலகத் தமிழர் வரலாற்றில் அழிக்க முடியாத — இனிமேல் மறுக்க முடியாத — ஒரு பெரும் வெற்றி ஆகும்.

இப்படி ஒரு வெற்றியை விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் வேறு ஓர் இனமும் பெற்றதில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-6)

## வாசகர் திருமுகம்

### நயினை உற்சவத்துக்கு முன் பாலத்தைத் திருத்துக!

தீவுப்பகுதிப் பிரயாணத்தின் முக்கிய இணைப்பாக இருப்பது யாழ். பண்ணைப்பாலம். இந்தப் பாலத்தின் இரும்புக் கேடர்கள், தகடுகள் என்பன கடல் நீர் காரணமாக உக்கியுள்ளதால் கூடிய விரைவில் போக்குவரத்து பாதிக்கப்படலாம். பெரும் பாரத்தோடு செல்கின்ற லொறிகள் மற்றும் பேருந்துகள் இந்தப் பாலத்தின் மேலால் பிரயாணம் செய்வதால் இப்பாலத்தின் திருத்த வேலைகள் உடன் கவனிக்கப்பட வேண்டும். கவனிக்கப்படவில்லையானால் தீவுப் பகுதியின் பிரயாணம் பெரும் சிரமத்துக்குள்ளாகலாம்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் வருடாந்த மஹோற்சவம் ஜூன் இரண்டாம் திகதி ஆரம்பமாகவுள்ளது. யாழ். குடா நாட்டு மக்கள் பெரும் எண்ணிக்கையாக இந்தப் பாலம் வழியாகவே தமது பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டும். வேறு பாதை கிடையாது. எனவே இப்பாலம் நயினை உற்சவத்துக்குமுன் திருத்தப்பட வேண்டும். அதற்கான ஒழுங்குகளை வீதி அபிவிருத்தி அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும்.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக எந்தத் திருத்த வேலையும் மேற்கொள்ளப்படாத நிலையில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள குறிகாட்டுவான் வரையிலான நெடுஞ்சாலையும் நயினை அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் முன் திருத்தப்பட வேண்டும் என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

நா. கோபாலகிருஷ்ணன்
தலைவர்
சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாசம்

### அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

வட்டு.தென்மேற்கு, வட்டு.தெற்கு கிராமசேவையாளர் பிரிவுகளில் பல வெறும் வளவுகள், பற்றைகள் செறிந்த காடாகக் காட்சியளிக்கின்றன. இதனால் அருகில் உள்ள பல வீட்டுக்காரர்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர். தமது வருவாய்க்காக வளர்க்கும் கோழிகள், குஞ்சுகள் சீரிகளின் தொல்லையால் அழிந்து போகின்றன. பள்ளிச் சிறார்கள் பாடசாலைக்குச் செல்லும்போது பாம்புகளின் தொல்லை ஒருபுறம். திருடர்களின் கைவரிசைக்கு மறைவிடமாகக் கூட இப்பற்றை வளவுகள் உதவுகின்றன. எனவே இவ் வளவுகளைத் துப்புரவு செய்வதற்கு சம்பந்தப்பட்ட உரிமையாளர்களையோ அல்லது வளவுகளைப் பொறுப்பேற்று மேற்பார்வை செய்பவர்களையோ இனங்கண்டு துப்புரவு செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் வீதிகளின் இருபுறங்களிலும் உள்ள புற்கள், பற்றைகளை அகற்றித் துப்புரவு செய்யப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளோ பிரதேச சபையினரோ முன்வருவார்கள் என நம்புகின்றேன்.

கந்தையா ஜெயதாஸ்
வட்டுக்கோட்டை

### விசேட அடையாள அட்டையை பயன்படுத்தினால் என்ன?

இந்த வருடம் நடக்கப் போகின்ற ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் விசேட அடையாள அட்டையைப் பயன்படுத்தலாமா?

இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்த வேண்டும். அது இல்லாத பரீட்சார்த்திகள் அல்லது விண்ணப்பித்து அதற்கிடையில் வராத பரீட்சார்த்திகள் அஞ்சல் அடையாள அட்டையைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறப்படுகிறது.

அப்படியானால் அஞ்சல் அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள் தேசிய அடையாள அட்டைக்கும் விண்ணப்பித்து வராத நிலையில் என்ன செய்வது? அவர்கள் பரீட்சைக்குத்தோற்ற முடியாதா?

இன்று யாழ். குடாநாட்டில் எந்த இடத்துக்குச் செல்வதானாலும் விசேட அடையாள அட்டையே போதுமானதாக இருக்கின்றது. அப்படி இருக்கும்போது பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள்— குறிப்பாக இரு அடையாள அட்டைகளும் இல்லாத மாணவர்கள்—விசேட அடையாள அட்டையைப் பயன்படுத்தினால் என்ன?

இதற்கான ஒரு நல்ல பதிலைப் பரீட்சை ஆணையாளரிடமிருந்து விரைவில் எதிர்பார்க்கின்றோம். இத்தகவல் பரீட்சை ஆணையாளருக்குச் சமர்ப்பணம்.

ஏ. சுதர்சனா
ஊர்காவற்றுறை.

# விவசாயம் செய்ய முடியாத நிலையில் 3,500 ஹெக்டேயர் வயல் நிலம்

வலி. கிழக்கு. ஏப்ரல் 26

யாழ். குடாநாட்டில் 12 ஆயிரத்து 500 ஹெக்டேயர் வயல் நிலப்பரப்பில் 3 ஆயிரத்து 500 ஹெக்டேயர் வயல் நிலப்பரப்பு இராணுவ பாதுகாப்பு வலயங்களுக்குள் இருப்பதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இராணுவ முகாம், பாதுகாப்பு வலயங்கள், இராணுவ காவல் அரண்கள் போன்றன அமைந்துள்ள அளவெட்டி, பளை தென்மராட்சி போன்ற பிரதேசங்களிலேயே இந்த 3 ஆயிரத்து 500 ஹெக்டேயர் வயல் பரப்புக்கள் விவசாயிகளினால் நெற்செய்கை செய்ய முடியாத நிலையில் இருந்து வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-180)

## கணனியில் விசேட பயிற்சி

வலி. தென்மேற்கு, ஏப்ரல் 26

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இதுவரை 3 அணிகளாக 150 பேர் கணனியில் விசேட பயிற்சி பெற்று வெளியேறியுள்ளனர்.

நவீன கணனி வசதிகளுடன் மேற்கொள்ளப்பட்ட கற்கை நெறியில் மூன்றாவது அணியில் 50 பேர் விசேடமாக சித்திபெற்று வெளியேறியுள்ளதாக கல்லூரி உப அதிபரும் கணனி விரிவுரையாளருமான என். ஏ. விமலேந்திரன் தெரிவித்தார்.

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

(இ-152)

## காரைநகரில் கிணற்றுக்குப் பெண் பலி

காரைநகர், ஏப்ரல் 26

காரைநகரில் கடந்த வாரம் குடும்பப் பெண் ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து மரணமானார்.

சத்திரந்தை, களபூமியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் இரத்தினகுமாரி (வயது 42) என்பவரே இறந்தவராவார்.

இதே பகுதியில் கடந்த சில மாதங்களில் கிணற்றுக்குள் விழுந்து மரணமான மூன்றாவதுபெண்இவர்எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-75)

## பாடசாலைக்கு அன்பளிப்பு

சண்டிலிப்பாய், ஏப்ரல் 26

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்திற்கு குடிதண்ணீர் பெறுவதற்காகச் சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான மின்சார மோட்டரும் அதற்கான பைப்புகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

வித்தியாலய முன்னாள் அதிபர் சைவப்புலவர் சு.செல்லத்துரை இதனை வழங்கி உள்ளார்.

(இ-153)

## வவுனியாவில் கடந்த வாரம் 20 பேர் கைது!

கொழும்பு, ஏப்ரல் 26

வவுனியாவில் கடந்த இரு வாரங்களில் 20 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா செயலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் நால்வர் பற்றி எந்த விவரமும் கிடைக்கவில்லை என வவுனியா செயலக இணைப்பதிகாரி எஸ். சிறீதரன் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளின் பின்னர் இதுவரையில் இருவர் மாத்திரமே விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஏனையோர் பொலீஸ் மற்றும் படையினரால் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என அவர் மேலும் கூறினார்.

(இ-8)


## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ)

## கேள்வி கோரல்

எமது சங்கத்தால் 2,500 வெற்றுச் சாக்குகளுக்கும், 16,500 வெற்றுப்பைகளுக்குமான கேள்வி 30-04-2000 வரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்வி கோர விரும்புபவர்கள் மீளளிப்பு வைப்பாக ரூபா 1000 செலுத்தி சங்க விநியோகப் படிவத்தில் கேள்வியைக் குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டுச் சமர்ப்பிக்கவும்.

– பொது முகாமையாளர்

24-04-2000. (சி/11954)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்

து. சசிகுமார்

அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி துரைராசா மகேஸ்வரி

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

H. N. D. A 2ஆம் வருட
பகுதி நேர மாணவர்கள்,
உயர் தொழில்நுட்ப நிறுவனம்.

(75742)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



### திருமதி இராசதுரை (சின்னமயில்) தங்கச்சியம்மா

தோற்றம் 20–03–1942 — மறைவு 27–03–2000

வேல் வீதி, மயிலிட்டியைச் சேர்ந்த திருமதி இராசதுரை (சின்னமயில்) தங்கச்சியம்மா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு வந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதோடுசபிண்டீகரணக் கிரியைகள் இன்று (26—04—2000) புதன்கிழமை அவரது மகனின் இல்லத்தில் நடைபெறும். இக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இ. அமிர்தலிங்கம் (பெரியதம்பி)
கற்கோவளம்,
பருத்தித்துறை.

(75733)

# வேலணை பஸ் டிப்போவை இயங்க வைப்பது சாத்தியமில்லை

நெடுந்தீவு, ஏப்ரல் 26

வேலணை பஸ் டிப்போவைத் தற்சமயம் இயங்க வைப்பது சாத்தியமில்லை என வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் எஸ். சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு, பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கிராம நிர்மாண மாநாட்டில் இது தொடர்பான கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்குப் பதில் அளித்த போதே அவர் இவ்வாறு சொன்னார்.

போதிய பஸ்கள் மற்றும் ஆளணி என்பன அற்ற நிலையில் தற்போது மேற்படி கோரிக்கையை செயற்படுத்த வாய்ப்புக்கள் இல்லை எனவும் மிகக் கூடுதலான பயணிகளைக் கொண்ட தென்மராட்சிப் பகுதிக்கே போதிய பஸ்கள் இல்லாத நிலை இருப்பதாகவும் சகல வளங்களும் கிடைக்கும் பட்சத்தில் இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

(க-111)

## மலேரியாத் தடுப்பு நடவடிக்கை

திருநெல்வேலி, ஏப்ரல் 26

தொண்டமானாறுப் பகுதியிலுள்ள குடவத்தை என்னுமிடத்தில் யாழ். மலேரியாத் தடுப்பு இயக்கப் பிரிவின் நடமாடும் வைத்தியசேவை கடந்த வாரம் இடம்பெற்றது.

நடமாடும் வைத்திய சேவைக்குழுவினர் வாகனம் மூலம் இங்கு சென்று இரத்தப் பரிசோதனை, வைத்திய சிகிச்சை, "மலத்தியோன்" நுளம்புக்கொல்லி மருந்து தெளித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

[இ-135]

# செஞ்சிலுவை வழித்துணையுடனான பயணிகள் கப்பல் சேவை குறித்து இன்னும் இறுதி முடிவு இல்லை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவைக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வழித்துணை வழங்குவது தொடர்பாக இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளன. ஆனால் எழுத்துமூலமான இணக்கப்பாட்டுக்கு இன்னமும் இருதரப்பும் வரவில்லை.

இப்படி செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார்.

கப்பல் சேவைக்கு வழித்துணை வழங்குவது தொடர்பான இணக்கப்பாட்டை எமது அமைப்பு இருதரப்பினருக்கும் தெரியப்படுத்தியுள்ளது.

சேவை நடத்துவது தொடர்பான விடயங்களில் இருதரப்பினரும் கொள்கை அளவில் இணக்கத்துக்கு வந்துள்ளனர். ஆனால் எழுத்து வடிவில் இன்னமும் உடன்பாடு எட்டப்படவில்லை.

இதுவிடயத்தில் இருதரப்புடனும் தொடர்ந்து பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன—

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## வேலணை பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி வலயங்கள்

நெடுந்தீவு, ஏப்ரல் 26

வேலணை பிரதேச செயலர் பிரிவு இரு சமுர்த்தி வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

வேலணை பல நோ. கூ. சங்க எல்லைக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவு ஜே-7 முதல் ஜே-21 வரை உள்ள பகுதிகள் ஒரு வலயமாகவும்—

புங்குடுதீவு நயினாதீவு பல நோ. கூ. சங்க எல்லைக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவு ஜே-22 முதல் ஜே-36 வரையான பகுதிகள் ஒரு வலயமாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

(க-111)


## வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள்

பகுதி

## யாழ்ப்பாணக் கல்லூரி

(யாழ் போதனா வைத்தியசாலைக்குமுன்பாக)

பின்வரும் கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

G. A. Q. யாழ்- பல்கலைக்கழகம்
G, A. Q. பேராதனைப் பல்கலைக்கழகம்
B. A. Part I யாழ்-பல்கலைக்கழகம்
B, A. Part II யாழ்-பல்கலைக்கழகம்
B. A. Final பேராதனைப்பல்கலைக்கழகம்

குறிப்பு;

1. ஆங்கில இலக்கியம், லிங்குஸ்ரிக் பாடங்கள் உட்பட எல்லாப் பாடங்களும் போதிக்கப்படும்.
2. விரிவுரை வகுப்புக்களுக்கு மேலதிகமாக (Tutorial-Class) கட்டுரை வகுப்புக்களும் பிரபல விரிவுரையாளர்களினால் மேற்கொள்ளப்படும்.
3. வார இறுதி வகுப்புக்கள், முழுப்பகல் நேர வகுப்புக்கள் என இரு பிரிவாக விரிவுரைகள் நடத்தப்படும்.
4. பல்கலைக்கழக தரமொத்த நூல் நிலைய வசதிகள் சகல மாணவர்களுக்கும் வழங்கப்படும்.

ஆரம்பம்: 5--5--2000

விவரங்களுக்கு:

பதிவாளர்,
யாழ்ப்பாணக் கல்லூரி
(போதனா வைத்தியசாலைக்கு முன்பாக
வர்த்தக வங்கிக்கு அருகில்)

(சி/11917)

# உதயன்

## பொறுப்புடன் நடந்து கொள்க!

அடுத்தது என்ன?

ஆனையிறவை அரசுப் படைகள் இழந்த பின்னர் பலதரப்புகளிலும் எழுப்பப்படும் கேள்வி இது.

''யாழ்ப்பாணத்தை இராணுவம் தொடர்ந்து தக்க வைத்திருக்கும் என்பதில் நாம் மிகவும் நம்பிக்கையாகவும், உறுதியாகவும் இருக்கின்றோம்''— என்று அறிவித்ததன் மூலம் இக்கேள்விக்கு தமது பக்கப் பதிலைத் தர முன்வந்திருக்கின்றார் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய.

''யாழ். குடாநாட்டில் ஒரு சதுர அங்குல நிலத்தைக் கூட விடுதலைப் புலிகள் பிடிக்க விடமாட்டோம்'' —என்று சூளுரைத்து நான்கு மாதங்களுக்கு முன்னர் அப்போதைய யாழ். இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க அளித்த பேட்டி, பத்திரிகையில் பிரசுரமாகி மை காய முன்னரே குடாநாட்டின் தலைவாசலில் கட்டைக்காடு — வெற்றிலைக்கேணிப் பிரதேசத்தைப் புலிகளிடம் இழக்க வேண்டியதாயிற்று

அப்போதைய யாழ். இராணுவத் தளபதியின் பேட்டியைப் போல இப்போது இராணுவத் தளபதி வழங்கிய உறுதிமொழியும் போய்விடுமோ என்ற சந்தேகம் சில வட்டாரங்களில் இன்னும் இருக்கத்தான் செய்கின்றது.

ஆனையிறவுப் படைத்தளத்தை இழந்தமை இராணுவத்துக்கு ஒரு பின்னடைவு அல்ல என்ற சாரப்பட இராணுவத் தளபதியும் இராணுவப் பேச்சாளர்களும் கூறிவருகிறார்கள்.

ஆனால் ''இந்த இழப்பு பேரதிர்ச்சி தருகின்றது. நமது யுத்த தந்திரோபாயங்களைத் தோல்வியுறச்செய்து பெரும் பாதக நிலையை இது ஏற்படுத்தியுள்ளது. வெற்றி கொள்ள முடியாதது எனக் கருதப்பட்ட ஆனையிறவுத் தளத்தை இழந்தது படையினருக்குப் பெரும் பின்னடைவாகும்''— என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.

எது, எப்படியோ தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் இந்த ஓகஸ்டுடன் முடிவடைவதால் அடுத்த ஆறு மாத காலத்துக்குள் பொதுத் தேர்தல் நடக்கப்போவது நிச்சயமாகிவிட்டது.

தீர்வு முயற்சி என்ற பெயருடன், ஜனாதிபதித் தேர்தலைப் போல பொதுத் தேர்தலையும் சமாளித்து விடலாம் என்று திட்டமிட்டிருந்த சந்திரிகா அரசுக்கு ஆனையிறவுத் தோல்வி அதிர்ச்சி அடியாக வந்திறங்கியுள்ளது.

மறுபுறத்தில், பொதுத் தேர்தல் காலத்தில் அரசுக்கு எதிராகக் குரல் எழுப்புவதற்கு— மெல்லுவதற்கு — விடயமின்றித் தவித்துக் கொண்டிருந்த எதிரணிக்கு நல்ல 'அவல்' கிடைத்தமாதிரி ஆனையிறவு கிட்டியிருக்கின்றது.

ஆனையிறவுச் சமரின் பின் விளைவுகள் இராணுவ நடவடிக்கைகளில் — சமர்களில்— புதிய போக்குகளை, மாற்றங்களை, பாதைகளைத் தோற்றுவிக்கும் என ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

அந்தப் பாதைகளை வகுத்துக் கொள்ளும் போது இரு தரப்பினரும் — அரசுப் படைகளும், புலிகளும் — ஒரு விடயத்தில் அதிக சிரத்தை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

அது பொதுமக்கள் பாதுகாப்பு என்ற விவகாரம் தான் பொதுமக்களுக்காகவே எல்லாம் என்று கூறும் இரு தரப்புகளும் இது விடயத்தில் பொறுப்புடன் நடந்து கொள்வார்களாக!

# தமிழர் நிலை குறித்து தெளிவான முறையில் குரல் கொடுக்கத் தயக்கம் காட்டாதீர்கள்!

## தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் வண. இம்மானுவேல் வலியுறுத்து

யாழ். ஆயர் இல்லத்தின் குரு முதல்வராக முன்னர் பணியாற்றிய வண. கலாநிதி எஸ்.ஜே. இமானுவேல் ஜேர்மனியில் இருந்து விடுத்திருக்கும் பகிரங்க அழைப்பு இது.

வரலாற்றில் முன்னொரு போதுமில்லாத நெருக்கடி மிக்க காலகட்டத்தில் தமிழ் மக்கள் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையில் சொல்லொணாத கஷ்டங்களையும் இழப்புகளையும்அடைந்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் அம் மக்கள் சார்பாக குரல் கொடுக்க வேண்டியது மனிதாபிமானம் மிக்க ஒருவரது கடப்பாடாகும்.

என்னைப் பொறுத்த வரையில் இதனை மனச்சாட்சி சுமத்திய ஒரு பணியாகஏற்று, இந்தஅவசர வேண்டுகோளை எனது அன்புக்குப் பாத்திரமானவர்களாகிய தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கத்தவர்களுக்கு விடுக்க விரும்புகிறேன்.

எனது இளம் பராயத்து பாடசாலை நாள்களிலிருந்து எப்போதுமே தந்தைசெல்வா மீதும் அவரது தலைமைத்துவப் பங்களிப்பு மற்றும் வழிகாட்டல்களின் மீதும் எனக்கு அசைக்க முடியாத பற்றும் அபிமானமும் இருந்து வந்துள்ளது.

அண்மைக் காலத்தில் சிரேஷ்ட அரசியல்வாதிகளான சம்பந்தன், யோகப் பாராஜசிங்கம், மாவை சேனாதிராஜா ஆகியோரைச் சந்தித்து தமிழர் நிலைமை குறித்து உரையாட• கருத்துப் பரிமாற சந்தர்ப்பம் வந்தது.

இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் அண்மைக்காலமாக ஏற்பட்டு வரும் பல்வேறு மாற்றங்கள் போன்றவற்றை உன்னிப்பாக அவதானித்து வருபவன் என்ற வகையில் தமிழர்களது வரலாற்று நெருக்கடி மிக்க இக் காலகட்டத்தில் அவசரமும் ஆக்க பூர்வமானதுமான பெறுமதி மிக்க பணியினை தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வந்து ஏற்றுச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இன்று ஏற்பட்டுள்ளது.

### பங்களிப்புத் தேவை

சிரேஷ்ட அரசியல்வாதிகளாகிய நீங்களே இதற்கு முற்றிலும் தகுதி வாய்ந்தவர்கள். தமிழர் உரிமைப் போராட்டத்தின் தோற்றம் வரலாறு உங்களுக்கு மிகவும் நெருக்கமானது. 1976–77 திருப்புமுனை ஏற்படும் காலகட்டத்திலிருந்துதீவிரவாதம் தலைதூக்கியதையடுத்து நீங்கள் ஜனநாயக எல்லைப்பாடுகள், வரம்புகளுக்குள் மிதவாதிகளாக, ஜனநாயகவாதிகளாகப்பணிபுரியவேண்டியவர்களாகியுள்ளீர்கள்.

எத்தகைய நிலைமையிலும் உங்களது பெறுமதி மிக்க பங்களிப்பு அத்தியாவசியமாக எல்லோராலும் உணரப்பட்டுள்ளது மாத்திரமன்றி அத்தகைய பணியினை நீங்கள் முன்வந்து செய்யவேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றார்கள். இதற்கான வெற்றிடத்தில் வெறுமை ஏற்பட்டுவிடாது உரிய பாத்திரத்தை ஏற்கவேண்டியது தமிழர் விடுதலைக் கூட்டணியினரது தலையாய கடமையாகும். மேலும் நம்பகத்தன்மையும் அவர்களுக்கே உரிய தனித்துவ அம்சமாகும்.

### வாய்மூடி மௌனியாக இருப்பது நியாயமல்ல

நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள துர்ப்பாக்கிய நிலைமைக்கு இரட்டைத்தனமான நிலைகளில்இயங்கும் பொறுப்பற்ற அரசே காரணமாகும். இன்றைய அரசின் ஜனநாயக வேஷம் ஓரளவு அம்பலமாகியுள்ள நிலையில் வாய்மூடி மௌனிகளாக உண்மை நிலையினைத் தெரிவிக்காமல் ஒதுங்கியிருப்பது நியாயமல்ல நாட்டில் தோன்றியுள்ள நெருக்கடி நிலையை இனி மேலும் இந்த அரசு தீர்க்குமென்று பாராமுகமாக இருப்பது ஏற்கக் கூடிய ஒன்றல்ல.

எனவே ஒரு சமயத் தலைவரென்ற ரீதியில தமிழர்களின் நிலை குறித்து தெளிவான ஒரு குரலில் எதுவித தயக்கத்திற்கும் இடமளியாது குரல் கொடுக்க வேண்டுமென மன்றாட்டமாகக் கேட்டுக் கொள்கின்றேன். உண்மை மற்றும் நீதியின் பேரால் இதற்கு குரல்கொடுக்கவேண்டியது தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கத்தவர்களது தலையாய கடமையாகும்.

வட்டுக்கோட்டை மற்றும் திம்புதீர்மானங்களுக்கு ஏற்ப, தமிழர் உரிமை போராட்டத்திற்கு ஜனநாயக, சாத்வீக வழிகளில் உங்களை அர்ப்பணித்துக்கொள்ளும் காலம் நெருங்கிவிட்டது. இந்த நிலையில் முனைப்புடன் செயற்படாது முடங்கியிருந்து மௌனிகளாக வாய்மூடியிருப்பது தமிழர் உரிமைப் போராட்டத்திற்குச் செய்யும் பாதகமானதொரு துரோகமாகும்.

எனவே உலகிற்கு உறுதியான நிலைப்பாட்டினைத் தெரியப்படுத்த முன்வர வேண்டும். அவ்வாறானதொரு நிலையில்தான் அரசின் ஜனநாயக முகமூடியினை, அகற்றி அதன் சுயரூபத்தை அம்பலப்படுத்த முடியும். இதன் மூலம் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தின் நியாயத்தினை, அதன் தூய்மையினை உலகிற்கு உணர்த்த முடியும். ★

## மகாயாகம் இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு சாந்தி, சமாதானம் ஏற்பட வேண்டும் எனக் கேட்டு நியந்த்ரீ சர்வதேச இந்து குருமார் ஒன்றிய ஆதரவுடன் இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத தில்லைநடராஜப் பெருமானுக்கு விசேட ருத்திர மஹாயாகம் நடைபெறவுள்ளது.

இன்றும் நாளையும் இந்த யாகம் நடைபெறும்.

இன்று புதன்கிழமை காலை 8 மணிமுதல் விநாயகர் வழிபாடு, வாஸ்து சாந்தி. சங்குஸ்தாபனம் யாக பூஜை, பஞ்சகுண்ட பூஜை, ஹோமம், மிருத்தியுஞ்சய ஹோமமும் பிற்பகல் 3 மணி முதல் ஸ்ரீ ருத்திர பாராயணம், திருமுறைப் பாராயணம், யாகபூஜை, குண்ட பூஜை. ஸ்ரீ ருத்திர ஹோமம், விசேஷ திரவிய ஹோமம் என்பனவும்—

நாளை வியாழக்கிழமை 5 மணிக்கு விஷேச சந்தி, பூதசுத்தி, சிவபூஜை, ஸ்ரீ ருத்திர பாராயணம், யாக பூஜை, ஹோமம் மஹாபூர்ணாகுதி, தீபாராதனை, விஷேச திரவிய அபிஷேகம், சங்காபிஷேகப் பூஜை, பஞ்சமுகார்ச்சனை என்பனவும் இடம்பெறவுள்ளன.

குடாநாட்டின் சிரேஷ்ட சிவாச்சாரியார்கள் மகா யாகக் கிரியைகளை நடத்தி வைப்பர்.

யாகத்தின் இறுதியில் நாட்டு மக்களுக்குச் சமாதானம் வேண்டி இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி தலைமையில் அருளாசி வழங்கும் நிகழ்வு இடம்பெறும். (அ-க)

## தேசியத்தைத் தந்த செல்வா!



ஞாலத்தின் நெஞ்சத்தில்
நிறைந்தவர்
ஞானியென அரசியலில்
விளங்கியவர்
ஈழத்தின் நலத்திற்கு
உழைத்தவர்
இளையவர் எழுச்சியைத்
தூண்டியவர்
நாளைய உதயத்தை
நாடியவர்
நம்தமிழரசின் நாயகராய்
விளங்கியவர்
வாழத் தமிழருக்கு உதவியவர்
வரலாற்றில் தமிழ்த் தேசியத்தை வழங்கியவர்!

(மதுரகவி காரை - எம்.பி. அருளானந்தன்
தந்தை செல்வாவின் 23ஆவது சிரார்த்த தினம் இன்றாகும்)

## மிருசுவில் வரை பஸ் சேவையை நீடிக்குமாறு கோரிக்கை

நெல்லியடி, ஏப்ரல் 26

பருத்தித்துறையிலிருந்து பளைவரை சேவையில் ஈடுபட்டு தற்பொழுது கொடிகாமம் வரை சேவையாற்றும் இ போ. ச. பஸ்ஸை மிருசுவில் வரை நீடிக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்குப்பகுதி, பச்சிலைப்பள்ளிப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த நூற்றுக் கணக்கான மக்கள் தற்பொழுது மிருசுவில் பகுதியில் தஞ்சமடைந்திருப்பதனாலும் — யாழ். செயலகத்தின் இணைப்பு அலுவலகம் மிருசுவிலில் இயங்கி வருவதனாலும் —

மக்களின் நலன்கருதி, இந்த பஸ்சேவையை மிருசுவில் வரை நீடிக்குமாறு இடம்பெயர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-109)

## நாளை

சித்திரை 15

வியாழக்கிழமை

திதி: அட்டமி

முற்பகல் 11.41 வரை.

நட்சத்திரம்: திருவோணம்

முன்இரவு 7.12வரை.

நடேசர் அபிஷேகம்

சுபநேரம்: 7.28 8 58

ராகுகாலம்: 11 28 2 58

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

வீணாய்ப் போன நாள் எது? நாம் ஒரு தடவை கூடச் சிரிக்காமல் கழித்து விட்ட நாள்.

-ஸெபாஸ்டியன் சாம்த்த பர்ட்

## தொற்றுநோயினால் இதுவரை 50க்கு மேற்பட்ட நாய்கள் மரணம்

யாழ். நகரிலும் ஏனைய இடங்களிலும் நாய்களுக்கு டிஸ்ரெம்பர் எனப்படும் தொற்று நோய் வேகமாகப் பரவி வருகின்றது. இத் தொற்றுநோய் காரணமாக இதுவரை 50க்கு மேற்பட்ட வளர்ப்பு நாய்கள் இறந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். நாவலர் வீதியில் இயங்கி வரும் யாழ். கால்நடை வைத்தியசாலைக்குப் பலர் தங்கள் வளர்ப்பு நாய்களைச் சிகிச்சைக்காகக் கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இந்த நோய்க்கு போடப்படும் தடுப்பு ஊசி மருந்து வைத்தியசாலைக்கு வருவதில்லை என்றும், தனியார் வர்த்தகர்களே இதனைக் கொழும்பிலிருந்து தருவித்துத் தரமுடியும் என்றும் யாழ். கால்நடை வைத்தியசாலையின் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். வசீகரன் தெரிவித்தார்.

இந்த நோய் ஏற்பட்ட நாய்கள் நடக்கமுடியாது தள்ளாடும். நாய்களின் கண்களில் பீளை ஏற்படும். வயிற்றின் அடிப்பாகத்தில் சிறுசிறு காயங்கள் போன்று காணப்படும். பாதங்களின் அடிப்பாகத்தில் கரடுமுரடான தன்மை காணப்படும் என்றும் டாக்டர் வசீகரன் தெரிவித்தார்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேசத்திலும் நாய்களுக்கு இந்த நோய் ஏற்பட்டதால் பல நாய்கள் அங்கு இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-135)

## தந்தை செல்வா நினைவு தினம்

தந்தை எஸ் ஜே வி. செல்வநாயகத்தின் 23 ஆவது நினைவு தினம் இன்றாகும்.

அதனை முன்னிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏற்பாட்டில் யாழ். நகரின் தந்தை செல்வா சதுக்கத்தில் அமைந்துள்ள அவரது சிலையடியில்இன்று காலை9 மணிக்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற உள்ளன. (இ-6)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

திரு. வி. கனகராசா Y.M.H.A. அருகில் திருநெல்வேலியை தற்போது வதிவிடமாகக் கொண்ட விஜயரத்தினம் விஜயலட்சுமி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை [595613248V] கடந்த 19-04-2000 அன்று திருநெல்வேலிக்கும் யாழ்.பஸ் நிலையத்திற்கும் இடையில் பலாலி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். [75741]

### விற்பனைக்கு

வேலணை 2 ஆம் வட்டாரத்தில் சாட்டி வீதியில் கூரை ஓடுகள், பனை மரங்கள், கதவுகள், திராந்திகள் முதலியன விற்பனைக்குண்டு. தொடர்பு: அப்பு விஷகடி வைத்தியர், வேலணை. யாழ்ப்பாணத்தில் சி. சோ. சண்முகரத்தினம் 145/4, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை. [75740]

ஐஸ்கிறீம், ஐஸ்பழம் தயாரிக்கும் மெசின் (புதியதும்), கோப்பி வறுக்கும் மின்சார றோஸ்ரர் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: றிக்கோ பத்மநாதன், 370, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். (75702)

### நாடகம்

''ஆயிரம் பொய் சொல்லி'' நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1. யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடகநூல் 2. நாடகம் எழுதுவது எப்படி? 3. யாழ்ப்பாணம் சிறுகதைத்தொகுதி. ரூபா 50. (75744)

### இறைச்சிக்கோழி

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். இல.31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (75538)

Broiler Cullbirdls, Cocoekerls இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் காலை 7.00 பெற்றுக் கொள்ளலாம். 19 முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி நல்லூர். (75748)

### WANTED

Wanted a house for use by doctor family within Jaffna Municipal Limits (within one Mile of Jaffna Teaching Hospital) Should have Satisfactory facilities - four rooms, attatched bathroom, Water Supply and Electricity - AD. NO. 1050, C/O Uthayan (75686)

### வீடு வாடகைக்கு

யாழ். நகரை அண்டிய பகுதியில் ஒரு குடும்பத்துக்கோ, பல்கலைக் கழக மாணவர்களுக்கோ, சகல வசதிகளுடனும் (3 பெரிய அறைகளும், சமையல் அறை வசதியுடன்) உண்டு. தொடர்பு: 186/26, குருநாதர் கோயில் லேன், ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம். (75751)

### தேவை

வீட்டில் இருந்து வேலைகளைப் பார்ப்பதற்கு 40 வயதுக்கு உட்பட்ட குடும்பப் பொறுப்பு இல்லாத பெண் தேவை. தங்குமிடவசதி, சாப்பாடு இலவசமாக வழங்கப்படும். தொடர்பு:- குறிஞ்சி 308, பரமேஸ்வராச் சந்தி. (கம்பஸ் சந்தி). (75745)

### O/L MATHS

Distinction, Credit பெறுபேறடைய இதுவரையும் அடிப்படை அறிவில்லாதவர்களும் ஆரம்பத்திலிருந்து Paper Class வரை கற்பிக்கப்படுவர். B. Sc (Cey) 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் பின்புறம், திருநெல்வேலி. (75588)

# தவறிவிட்டது

சங்குவேலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த

**திரு. மயில்வாகனம் மகேஸ்வரன்**

என்பவரின் தேசிய அடையாள அட்டை (இலக்கம்–623?4242V), விசேட அடையாள அட்டை என்பன உடுவில் – சண்டிலிப்பாய் வீதியில் 24 - 04 – 2000ஆம் திகதியன்று தவறவிடப்பட்டு விட்டன. அவற்றைக் கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் கொடுத்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ம. மகேஸ்வரன்.

(757555)

# இந்து சமயப் பேரவை-யாழ்ப்பாணம்

நல்லைஆதீனம், நியந்ரீ. இந்து குருமார் ஒன்றியம்,
சேர் பொன். இராமநாத வேதாகம ஆய்வு நிறுவன சிவாச்சார்ய குருகுலம்,
தர்மசாஸ்தா குருகுலம் மற்றும் சிவானுபூதிச் செல்வர்கள்
ஆகியோர் இணைந்து லோகக்ஷேமத்தை முன்னிட்டு நடத்தும்

## பஞ்சகுண்டபக்ஷஸ்ரீருத்ரமஹாயாகம்

இடம்: கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நடராஜப் பெருமான் ஆலயம்.

காலம்: விக்கிரம வருட சித்திரை மீ 15 ஆம் நாள் 27-04-2000 வியாழக்கிழமை காலை 5.00 மணிமுதல் 11.00 மணி வரை விசேட யாகம், சங்காபிஷேகம், பஞ்சமுகார்ச்சனை.

முற்பகல் 11.00 மணி முதல் இந்துசமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள் தலைமையில் ஆசியுரைகள் இடம்பெறும்.

ஆசியுரைகள் வழங்குவோர்:-

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சார்யசுவாமிகள் (நல்லை ஆதீனம்)

வேதசிவாகமகிரியாமணி சிவஸ்ரீ கு. இராஜேந்திரக்குருக்கள்

பேராசிரியர் பிரம்மஸ்ரீப. கோபாலகிருஷ்ணஐயர் (தலைவர் - இந்து நாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள் (தலைவர்-இந்து குருமார் ஒன்றியம்)

சிவாகமகிரியாதத்துவநிதி சிவஸ்ரீ ச சோமாஸ்கந்தக்குருக்கள் (மஹா யாக பிரதம சிவாச்சாரியார்)

சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் (அதிபர்- தர்மசாஸ்தா குருகுலம்)

சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் (அதிபர், திருக்கணித பஞ்சாங்க நிலையம்)

அருட்கவி சி. விநாசித்தம்பி
தலைவர்.

சி. சக்திகிரீவன்
கௌரவ செயலாளர்.

**இந்து சமயப் பேரவை**
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/11961)

# யாழ். ஆஸ்பத்திரியில் முக்கிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையில் நடைபெறும் வைத்திய சிகிச்சைக் கிளினிக்குகளில் நீரிழிவு நோய்க்கு வழங்கப்படும் டையோனில், மெற்போமின் ஆகிய குளிகைகளுக்குப்பலத்த தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதேவேளை இரத்த அழுத்த நோய்க்கு வழங்கப்படும் நிபிடிப்பின் என்ற மருந்துக்கும் மற்றும் சில மருந்து வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் இம்மருந்து வகைகளைத் தனியார் வைத்திய சாலைகளில் நோயாளர்கள் வாங்க வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — இந்த வருடம் இரண்டாம் காலாண்டுக்கான மருந்து வகைகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டு வைத்தியசாலை நிர்வாகத்தினால் கொழும்பிலுள்ள சுகாதாரத் திணைக்கள தலைமை அலுவலகத்துக்கு அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் முதலாம் காலாண்டுக்கென அனுமதிக்கப்பட்ட மருந்துவகைகளில் ஒரு பகுதி இதுவரை இங்கு அனுப்பி வைக்கப்படாதிருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்களிலிருந்து அறியப்படுகின்றது.

மருந்துத் தட்டுப்பாட்டினால் வசதி குறைந்த நிலையிலுள்ள ஏழை நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். (இ-135)

# நெல் நல்ல விளைச்சல்

வலி. கிழக்கு, ஏப்ரல் 26

கடந்த போகத்தில் மானாவரியாக பயிரிடப்பட்ட நெல் சிறந்த விளைச்சலை அளித்துள்ளதாக யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ச. சின்னத்துரை தெரிவித்தார்.

இந்தக் கால போகத்தில் சராசரியாக ஒருபரப்புக்கு 3 புசல் நெல் பெறப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்' (இ-180)

தும்பளை நெல்லண்டை

## பத்திரகாளி அம்மன் கோயில் வெளிமடைப் பொங்கல்


மேற்படி ஆலயத்தில் 28 - 04 - 2000 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலைப் பூசையுடன், விளக்கு வைக்கப்பட்டு 05 - 05 - 2000 ஆம் திகதி வெளிமடையும் மறுநாள் காலை பொங்கலும் இடம்பெறும்.

நிதி, பொருள்கள் அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் சபையின் பொருளாளரிடம் கொடுத்து பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

– தருமபரிபாலன சபை

தும்பளை, நெல்லண்டை
அம்மன் கோயில்,
பருத்தித்துறை. (75753)

## நீங்காத நினைவுகளில் 41 ஆம் நாள்



அண்ணாவியார்

**வேலன் செல்வமணி**

தோற்றம் 1935 — 04 — 06

மறைவு 2000 — 03 — 17

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்திகேட்டு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் அளித்த அன்பு உள்ளங்களுக்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இன்று (26 - 4 - 2000) புதன் கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குகொண்டு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்

சிவசக்தி சாலினி
(ஆட்டோ உரிமையாளர்)
இ. மனோகரராசா,
மைத்துனர்.

தற்காலிக முகவரி:
உடுவில்
ரொபிக் கொம்பனி,
மானிப்பாய்.

(சி/11959)

# பெற்றோல், மண்ணெண்ணெய் போதியளவு கையிருப்பில்

## தேவைக்கு அதிகமாக வாங்கி செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தாதீர்

யாழ்ப்பாணம்,ஏப்.26

குடாநாட்டு மக்களின் பாவனைக்குத் தேவையான பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் என்பன காங்கேசன்துறையிலுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபன எண்ணெய்க் களஞ்சியத்தில் போதியளவில் கையிருப்பில் இருப்பதாகவும் -

தற்போது ஏற்பட்டிருக்கும் பதற்றமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தேவைக்கு அதிகமாக எரிபொருள்களைக் கொள்வனவு செய்து செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம் என்றும்-

பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ் கிளை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்த கப்பலிலும் போதியளவு பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் என்பன எடுத்து வரப்பட்டுள்ளன. அடுத்த வாரமும் இன்னுமொரு கப்பல் எரிபொருளை ஏற்றிவரத் தயாராகக் கொழும்பில் தரித்து நிற்கிறது. எனவே குடாநாட்டு மக்களின் தேவைக்கான எரிபொருள் போதியளவு கையிருப்பில் உள்ளது. எனவே பொதுமக்கள் எரிபொருள் நிலையங்களுக்கு ஒரே சமயத்தில் படையெடுத்துச் சென்று எரிபொருளை வாங்கிச் சேமித்து வைப்பதன் மூலம் தேவையற்ற செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம். இவ்வாறு செய்வதனால் எரிபொருள் நிலையத்தில் திடீர் தட்டுப்பாடு ஏற்பட்டவுடன் கள்ளச்சந்தையில் எரிபொருளின் விலையும் பூதாகாரமாக உயரும் நிலை ஏற்படுகின்றது. இதனால் கள்ளச்சந்தையில் ஒரு லீற்றர் பெற்றோல் 156 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் 30 ரூபாவாகவும் தற்போது விற்பனை செய்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள எரிபொருள் நிலையங்களுக்கு காங்கேசன்துறையில் உள்ள எண்ணெய்க் களஞ்சியத்தில் இருந்தே பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்றன பவுஸர் மூலமாகவும், லொறிகள் மூலமாகவும் எடுத்து வரப்படுகின்றன. குறிப்பாக பெற்றோல் 'பரல்'களில் அடைக்கப்பட்ட நிலையில் லொறிகளிலேயே இங்கு எடுத்துவரப்படுகின்றன. அதுவும் செயலக லொறிகளிலேயே எடுத்து வரப்படுகின்றன. இரண்டு அல்லது மூன்று லொறிகளே எரிபொருள் ஏற்றுவதற்காக அனுமதிக்கப்படுகின்றன. அவ்வாறு எடுத்துவரப்படும் இரண்டு லொறி பெற்றோலும் இங்குள்ள ஒன்று அல்லது இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கே வழங்கப் போதுமானதாகவுள்ளது. அதனால் மக்கள் அங்கு முண்டியடித்துக் கொண்டு 'கியூ'வில் நிற்கின்றனர். சில சமயங்களில் எண்ணெய் மற்றும் உணவுப் பொருள்களை எடுத்துவருவதற்காகச் செல்லும் லொறிகளை பாதுகாப்புச் சோதனைகளுக்காக நிறுத்தி வைக்கும்போது படையினர் தமது தேவைகளுக்காகவும் பயன்படுத்துகின்றனர். அதனால் குறித்த தினத்தில் இங்கே எரிபொருளை ஏற்றிவர முடியாத நிலையும் ஏற்படுகின்றது - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-9-4)

# மண்ணெண்ணெய் கலந்த பெற்றோல் விற்பனை

யாழ்ப்பாணம்,ஏப்.26

யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் கலப்படம் செய்யப்பட்ட பெற்றோல் விற்பனை செய்யப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

நடைபாதை வியாபாரிகள் உட்படச் சில அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் நிலையங்களிலும் மண்ணெண்ணெயுடன் கலந்த பெற்றோல் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி பெற்றோலுக்கு செயற்கைத் தட்டுப்பாட்டினை ஏற்படுத்தும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டு வருகிறார்கள்.

யாழ். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிலையங்களுக்கு ஒவ்வொரு தடவையும் 25 பரல் பெற்றோல் வழங்கப்படுகின்றது.

(ஐ-5)

## ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை

# தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பலருக்கு பெறுபேறு வரவில்லை

யாழ்ப்பாணம்,ஏப்.26

யாழ். மாவட்டத்தில் இருந்து ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் முழுமையாக வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழனன்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் எடுத்துவரப்பட்ட பெறுபேறுகள் சனிக்கிழமையும், திங்கட்கிழமையும் இங்கு விநியோகிக்கப்பட்டன. இதனையடுத்தே பல பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் தபாலில் வந்து சேராமை தெரிய வந்துள்ளது. இதனால் பரீட்சார்த்திகள் தபால் நிலையங்களுக்குச் சென்று தமது பெறுபேறுகள் கிடைக்கவில்லை என முறையிட்டுள்ளனர்.

இதேவேளை -

நேற்று எடுத்து வரப்பட்டுள்ள 223 தபாற்பொதிகள் இன்று தரம் பிரிக்கப்படவுள்ளதால் மிகுதிப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அவற்றில் அடங்கியிருக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாக யாழ். தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# நயினை உற்சவத்துக்கான முன்னேற்பாடுகள் ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஏப்.26

நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில் வருடாந்த உற்சவ ஏற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் யாழ். செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ்.மாநகர சபை, வடபிராந்தியப் போக்குவரத்துச்சபை அதிகாரிகள் மற்றும் வேலணைப் பிரதேச செயலர் உட்படப் பல அரச திணைக்களங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

ஜூன் 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் இந்த ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ளும் அடியார்களின் நன்மை கருதி இக்கூட்டத்தில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

தீர்மானங்களின் விவரம் வருமாறு:-

* குமுதினிப் படகினைத் திருத்தி உற்சவ காலங்களில் சேவையில் ஈடுபடுத்துதல்.

* புங்குடுதீவு - வழுக்கையாறு - குறிகாட்டுவான் வீதி, புங்குடுதீவு கொட்டைக்காடு அம்மன் வீதி போன்றவற்றைத் திருத்தம் செய்தல்.

* பண்ணைப் பாலத்தைப் புனரமைத்தல்.

* யாழ். மத்திய பஸ் நிலையத்தில் உற்சவ காலத்தில் குடிதண்ணீர் வசதி, மலசலகூட வசதிகளை யாழ். மாநகர சபை மூலம் அமைத்தல்.

* யாழ். பஸ் நிலையத்தில் இருந்து அடியார்களின் எண்ணிக்கைக்கேற்ப வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையினால் பஸ் சேவைகள் நடத்தப்பட வேண்டும்.

ஆலய உற்சவம் தொடர்பான அடுத்த கூட்டத்தை மே மாதம் 23ஆம் திகதி யாழ். செயலகத்தில் கூட்டி மேலதிக விடயங்கள் தொடர்பாக ஆராய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. *

(ஐ-5)

# மேலும் 17 ஆயிரம் பேரை படையில் சேர்க்க முடிவு

கொழும்பு,ஏப்.26

இராணுவத்தில் மேலும் 17 ஆயிரம் பேரை இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே உங்கள் பிள்ளைகளை படையில் சேர அனுப்புங்கள்.

இவ்வாறான வேண்டுகோள் ஒன்றைப் பெற்றோரிடம் விடுத்துள்ளார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பாலித பெர்னாண்டோ.

இராணுவத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டில் வைத்தே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இன்றுள்ள நிலையில் இராணுவத்துக்குத் தேவையானது உற்சாகமே ஆகும். பொது மக்கள் படையினருக்கு உற்சாகமூட்ட முன்வரவேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளைகளைப் படைக்கு அனுப்பவேண்டும். அதன்மூலம் ஓய்வின்றிப் போரிடும் படையினருக்கு ஓய்வு கிடைக்க வாய்ப்புக்கிடைக்கும் -

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-க-3)

# விசேட அ.அட்டைக்கான விண்ணப்பங்கள் தேக்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.26

படையினரால் விநியோகிக்கப்பட்ட விசேட அடையாள அட்டையைத் தொலைத்து மீளப் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களில் 500 பேரின் விண்ணப்பங்கள் யாழ். விசேட அடையாள அட்டைக் காரியாலயத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

98ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்குப் பின்னர் விண்ணப்பித்தோரின் விண்ணப்பங்களே தேங்கியுள்ளன.

விசேட அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்களுக்கு மீளவும் அடையாள அட்டைகளை வழங்கவேண்டாம் எனப் படையினர் உத்தரவிட்டதைத் தொடர்ந்தே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும்-

98ஆம் ஆண்டுக்கு முன்னர் இவ்வாறு தொலைத்து மீளப் பெற விண்ணப்பித்த சுமார் 900 பேருக்கு புதிய அடையாள அட்டைகளைத் தாம் விநியோகித்துள்ளதாகவும் -

விசேட அடையாள அட்டைப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

1995ஆம் ஆண்டில் விசேட அடையாள அட்டை வழங்க ஆரம்பித்ததில் இருந்து கடந்த மார்ச் 31ஆம் திகதிவரை 3 லட்சத்து 89 ஆயிரத்து 520 அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 69 ஆயிரத்து 947 அட்டைகள் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

(ஐ-9-4)

## ஓய்வூதியம் கிடைக்கவில்லை

யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கான இம்மாதத்துக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை.

ஓய்வூதிய வவுச்சர்கள் ஏப்ரல் 8ஆம் திகதி ஓய்வூதியர்களுக்குக் கிடைத்த போதிலும் அதற்கான காசோலைகளும் பட்டியல்களும் வங்கிகளுக்கு வந்து சேராததால் ஓய்வூதியர்கள் தினமும் வங்கிகளுக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

புதுவருடத்தை ஒட்டி ஏப்ரல் 6ஆம் திகதி ஓய்வூதியம் வழங்கப்பட்ட போதிலும் உள்ளூராட்சி ஓய்வூதியர்கள் கைக்கெட்டியது வாய்க்கு எட்டாத நிலையில் உள்ளனர்.

(ஐ-117)

## பரிசளிப்பு வைபவம்

யாழ். மாநகராட்சிமன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே அண்மையில் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

இப்போட்டிகள் யாவும் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நிலையங்களில் 6 பிரிவுகளாக நடத்தப்பட்டன.

இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட சகல மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9-4)

## விபத்தில் வயோதிபர் பலி

உரும்பிராயில் நேற்று படையினரின் வாகனமும் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் வயோதிபர் ஒருவர் அவ்விடத்திலேயே உயிரிழந்தார்.

சைக்கிளில் சென்றவரும் உடுவிலைச் சேர்ந்தவருமான கபிரியேல் அன்ரனி பெர்னாண்டோ (வயது 70) என்பவரே இச்சம்பவத்தில் மரணமானவராவார்.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு மரண விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-15-139)

## விவசாயக் குழுக் கூட்டம்

மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம் யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-5)

## சிறுவர்களின் நலன்கருதி

# உலகெங்கும் ஒருவார காலம் யுத்த நிறுத்தம் செய்யக் கோரிக்கை

ஜெனீவா,ஏப்.26

ஆயுத மோதல்களில் ஈடுபட்டுள்ள நாடுகளும் மற்றும் குழுக்களும் சிறுவர் நலன் கருதி ஒரு வாரம் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் என்று ஐ.நா. சபை கோரியுள்ளது.

ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானின் பிரதிநிதியான ஒலறா ஒட்டுணு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த யுத்த நிறுத்தம் ஒரே சமயத்தில் உலகம் முழுவதிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும் -

சர்வதேசச் சமூகம் அதை அங்கீகரிக்க வேண்டும் என்றும் -

அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் சிறுவர் நலன்களைப் பேணும் அதிகாரியாக இவர் செயற்பட்டு வருகிறார்.

(ஐ-3-9)


## சந்திக்கவும்

வவுனியா கல்வியியற் கல்லூரியில் மே மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் பயிற்சிநெறியில் அனுமதிபெற்றுச் செல்ல முடியாத நிலையில் இருக்கின்ற அனைத்து மாணவர்களையும் இருபாலைச் சந்தியில் அமைந்துள்ள **E BANY AGENCY POST OFFICE**இல் நாளை காலை 10.00 மணிக்கு சமுகம்தருமாறு வேண்டப்படுகின்றனர்.

*வவுனியா கல்வியியற் கல்லூரி மாணவர்.*

(75770)


# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 - 08 - 1939



உதிர்வு 13 - 05 - 1993

## அமரர் இராசதுரை சடாட்சரம்

(உரிமையாளர், வினோ தங்கமாளிகை)

திதி:- 26-04-2000

கண்ணை இமை காப்பது போல் எம்மை
காத்து தரணியில் வாழ வழி அமைத்தீர்கள்!
ஆண்டுகள் ஏழு ஆனதப்பா - எம்
விழியினைத் தொலைத்து நாம் பாரினில்
பரிதவிக்க நிற்கின்றோம்! இங்கே
எம் வாசலில் உம் நிழல் மட்டும் தெரிகிறது!
உங்கள் கனவுகளை எங்கள் நினைவுகளாய்
சுமந்து நிற்கின்றோம் - என்றென்றும்
பார்த்திருந்த உங்கள் ஒளி முகத்தினைக்
காண கண்மூடாமல் காத்திருப்போம்!
ஓம் சாந்தி!

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*41, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.*

*நீர்வேலி வடக்கு, நீர்வேலி.*

*வினோ நகைப் பூங்கா, 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

(C/??965)

## கொழும்பு நீதிவான்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் சகல நீதிபதிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின்படி சந்தேகநபர் ஒருவரை குறிப்பிட்ட நீதிமன்றில் முற்படுத்த முடியாதுவிடின் அந்த நபர் எங்கு உள்ளாரோ அந்த இடத்திலுள்ள நீதிவான் முன்னிலையில் முற்படுத்தி உரிய கட்டளையைப் பெற வேண்டும் என்பதைப் பொலீஸாருக்கு சுட்டிக்காட்டிய நீதிவான், இச் சந்தேக நபர்களை வெலிக்கடைச் சிறைச்சாலையை உள்ளடக்கிய கொழும்பு பிரதம நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கின் சந்தேகநபர்கள் வழமையாகப் பயணிகள் விமானத்திலா அல்லது படையினரின் விமானத்திலா யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்படுகிறார்கள் என்பது பற்றிய அறிக்கை ஒன்றை ஏப்ரல் 11ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு நீதிமன்றினால் வெலிக்கடைச் சிறைச்சாலை ஆணையாளருக்கும், கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி லின்டன் ரத்நாயக்காவுக்கும் கட்டளையிடப்பட்டிருந்தது. இதுவரையும் இது தொடர்பான அறிக்கை எதுவும் மன்றிற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## பேச்சுக்கள் தொடங்குவ...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

புலிகள் யாழ்ப்பாணத்தை முழுமையாகக் கைப்பற்றிவிடுவர் என்று அப்பேட்டியில் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். அப்படிப் பேச்சுக்களை ஆரம்பிக்காத பட்சத்தில் யாழ். குடாநாட்டை முழுமையாக அவர்கள் கைப்பற்றி விடுவார்கள் என்று ரணில் கூறினார். கொழும்பு திரும்பியதும் நடந்த பத்திரிகையாளர்கள் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:-

தவறான தலைமைத்துவம், தவறான வழிகாட்டல் என்பனவற்றின் மூலம் இன்றைய யுத்தத்தில் வெல்ல முடியாது. அரசியல் பேச்சு மூலமே தீர்வைக் காணமுடியும்.

எதிர்காலத்தில் நோர்வே அரசின் உதவியுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும்போது புலிகளின் கை ஓங்கியே இருக்கும். ஒரேவேளையில் இராணுவ மற்றும் அரசியல் ரீதியாகப் பலம் வாய்ந்த சக்தியாக அவர்கள் விளங்குவர். அத்தகைய நிலையிலேயே அவர்கள் பேச்சில் பங்குபற்றுவர்.

இன்று மிக மோசமான நிலையில் - பலம் குன்றிய நிலையில் - அரசு உள்ளது. புலிகள் இராணுவ மற்றும் அரசியல் ரீதியாக பலமான நிலையில் உள்ளதால் தாம் விரும்பிய தீர்வைப் பெறமுனைவர்.

எமது கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நடக்கும் பேச்சுக்கள் அடுத்த மாத இறுதியில் அல்லது ஜூன் மாத முதல் வாரத்தில் பூர்த்தியாகும் என நம்புகிறேன். அதன் பின்னர் விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் பங்குபற்றுவர் என நம்புகிறேன்.

எமக்கும் அரசுக்கும் இடையில் எட்டப்படும் தீர்வு யோசனையை விடுதலைப் புலிகள் ஏற்பார்களா என்ற நிலை இன்று ஏற்பட்டுள்ளது. அவர்கள் ஆனையிறவைக் கைப்பற்றியதன் மூலம் பலமான நிலையில் உள்ளனர். பலம் குன்றிய நிலையில் உள்ள அரசாங்கம் அவர்களின் கோரிக்கைகளை ஏற்குமா என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

### தணிக்கையை நீக்குக

யுத்தம் தொடர்பான செய்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தணிக்கை நீக்கப்படவேண்டும். இந்தத் தணிக்கை படையினரைப் பாதுகாப்பதற்கல்ல. அரசாங்கத்தையும் திறமையற்ற இராணுவ அதிகாரிகளையும் பாதுகாப்பதற்காகவே இந்தத் தணிக்கை அமுல் செய்யப்பட்டுள்ளது.

யுத்த இரகசியங்கள் வெளியில் வராமல் இருக்கவே தணிக்கை அமுல் செய்யப்பட்டது என்று அரசு கூறுகிறது. ஆனால் ஆனையிறவில் நடந்தது என்ன? ஆனையிறவை இழந்ததன் மூலம் அரசியல் ரீதியிலும், இராணுவ ரீதியிலும் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகி இன்றுள்ள நிலைமை குறித்தும், எதிர்காலத்தில் எடுக்கவிருக்கும் இராணுவ நடவடிக்கைகள் குறித்தும் விளக்க வேண்டும். ஆனையிறவுத் தோல்விக்கு ஜனாதிபதியும், அரசாங்கமும், பாதுகாப்புப் பிரதி அமைச்சருமே பொறுப்பேற்க வேண்டும்.

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணப்படுவதையே இந்தியத் தலைவர்கள் பலரும் என்னிடம் வலியுறுத்தினர். எக்காரணம் கொண்டும் இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடமாட்டாது என்றும் அவர்கள் என்னிடம் தெரிவித்தனர் - என்றார் ரணில்.

(ஐ-3-7-8)

## கட்டுப்பாட்டுக் கோபுரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருந்து காயத்துடன் வெளியேறி தற்போது கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் இராணுவக் கோப்ரல் ஆ.ஜே.கே. டபிள்யூ. உபாலி இவ்வாறு தெரிவித்தார்.

ஆனையிறவு முகாமில் கடமையில் இருந்தபோது கடந்த 22 ஆம் திகதி முகாம் மீது புலிகள் ஆட்லறித் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் எமது தொலைத் தொடர்புக் கட்டுப்பாட்டுக் கோபுரம் சிதறிச் சேதமடைந்தது. அதனையடுத்து அங்கிருந்து படையணிகளை வெளியேறுமாறு உயர் மட்டத்தில் இருந்து உத்தரவு கிடைத்தது. அதனைத் தொடர்ந்து நாம் எல்லோரும் எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தப்பி ஓட ஆரம்பித்தோம். அப்போது கிளாலி வாவியூடாக தாக்குதல் நடத்திக் கொண்டுவந்த புலிகளின் மோட்டார் தாக்குதலில் நானும் எம்மில் பலரும் காயமடைந்தோம். பின்னர் நாங்கள் பளை முகாமுக்குச் சென்றோம். அங்கிருந்து கொழும்புக்கு அழைத்து வரப்பட்டோம்.

இவ்வாறு அந்த இராணுவக் கோப்ரல் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

ஆனையிறவு முகாம் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் பல படையினர் உயிரிழந்தனர். அதே போல பல படையினர் காயமடைந்தனர். எனினும் எம்மைப் பின்வாங்குமாறு உயர் அதிகாரிகள் தெரிவித்ததனால் காயமடைந்தவர்களையும் உயிரிழந்தவர்களையும் மீட்கமுடியாத நிலையில் அங்கேயே கைவிட்டுத் தப்பி வந்துவிட்டோம் எனவும்-

கிளாலி மற்றும் ரயில் தண்டவாளப் பாதையூடாக இரு பிரிவுகளாகப் பின்வாங்கிச் சென்ற போதும் புலிகள் தம்மீது தாக் குதல் நடத்தியதாகவும் -

காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள மற்றும் சில சிப்பாய்கள் தெரிவித்தனர். (ஐ-7)

## 126 சடலங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லங்கள் வவுனியாவில் அடக்கம் செய்யப்படும் என்றும்-

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதேவேளையில் -

தம்மால் கைப்பற்றப்பட்டுள்ள படையினரின் சடலங்களில் மேலும் ஒரு தொகுதி சடலங்கள் அடுத்து வரும் நாள்களில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளிக்கப்படும் என்று விடுதலைப் புலிகள் நேற்று மாலை வன்னியில் அறிவித்துள்ளனர். மொத்தமாக எத்தனை சடலங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்ற விவரங்களை விடுதலைப்புலிகள் வெளியிடவில்லை.


எலைற்
கல்வி நிறுவனம்
192, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

O/L DAY CLASS

வழமையான ஆசிரியர்குழு
பிரிவு - 2
ஆரம்பம்: 28-04-2000
வெள்ளி காலை 8.00 மணி
(75728) நிர்வாகி.



NCCA பரீட்சை

மேற்படி அரச அங்கீகாரம் பெற்ற கணனிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை எமது தலைமை அலுவலகத்திலும் நெல்லியடிக் கிளை அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

★ கணனித் துறையில் ஏதாவது ஒரு பயிற்சிநெறியினை முடித்துக் கொண்ட மாணவர்களும், புதிய மாணவர்களும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கமுடியும்.

★ 2000ஆம் ஆண்டு A/L பரீட்சை எடுக்கும் மாணவர்களின் நலன்கருதி மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விசேட பிரிவொன்று செப்ரெம்பர் மாத முதலாம் வாரத்தில் ஆரம்பிக்கப்படும்.

★ விண்ணப்ப முடிவு திகதி:

28–04–2000

இயக்குநர்,
IIS.
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/11966)



எமது புதிய வீடியோ
CD வெளியீடுகள்
கார்த்திக் – கௌசல்யா
★ சந்தித்தவேளை
சத்தியராஜ் – குஷ்பு
★ வீரநடை
பிரதிகள்
உடன்பெற்றுக்கொள்ளலாம்
பிரமிட் CD
வெளியீடுகள்
☞ சங்கர்
☞ சிவாஜியின்
பாராட்டு விழாவும்.
இசை நிகழ்ச்சியும்.
(சிங்கப்பூரில் நடந்த ஹரிகரன் மற்றும் முன்னணி நட்சத்திரங்களின் இசை நிகழ்ச்சி)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/11970)



வீடியோ CD
வெளியீடு
சத்தியராஜ், குஷ்பு
நடித்த
* வீரநடை
கார்த்திக், கௌசல்யா
* சந்தித்தவேளை
பிரதிகள் உடன்பெறலாம்
விஷ்ணு வீடியோ,
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில்.
(75772)



ஷண்ணின் இன்றைய
ஒரிஜினல் வீடியோ CD
வெளியீடு
☞ வீரநடை.
☞ சந்தித்தவேளை
அனைவரும் பிரதிகளை இன்றே பெறலாம்.
போஸ்ரர்கள் இலவசம்
ஷண்
றெக்கோடிங் ஸ்பொட்
யாழ்ப்பாணம்.
(75773)



இன்றைய ஓடியோ CD
வெளியீடுகள்
தேவாவின் இசையில்
* வெற்றிக்கொடி கட்டு
* நடவடிக்கை
* சீமை துரை
மூர்த்தி வீடியோ
சென்ரர்
மானிப்பாய்.
T.P.No: 2884
(C/11967)



# சிவநெறி கல்வி நிலையம்

(ஸ்ரான்லி கல்லூரிக்கு அருகில்)

எமது கல்வி நிலையத்தில் கல்வி பயின்று 1999 க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள்.

| | | |
|---|---|---|
| 1. சு. துளசி. | 9D C | (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) |
| 2. த. கனிமொழி. | 9D S | (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) |
| 3. கா. ரீஷிகேசன். | 7D 2C S | (யா/இந்துக்கல்லூரி) |
| 4. க. கமலரூபன். | 6D 2C S | (யா/இந்துக்கல்லூரி) |
| 5. த. கஜேந்திரதாஸ். | 5D 4C S | (யா/கனகரத்தினம் ம. ம. வி) |
| 6. அ. சர்ப்பா. | 5D 4C S | (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) |
| 7. நா. சுகுணேந்திரன். | 5D 3C 2S | (சென் பற்றிக்ஸ் கல்லூரி) |
| 8. ச. சர்மிளா. | 4D 6C | (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) |
| 9. ப. அசோக்தா. | 4D 5C S | (யா/இந்து மகளிர் கல்லூரி) |
| 10. தி. மோதிலால் சுந்தரதாசன. | 3D 5C 2S | (யா/கனகரத்தினம் ம.ம.வி.) |
| 11. இ. ராஜபிரதீபா. | 3D 4C 2S | (யா/கனகரத்தினம் ம.ம.வி.) |
| 12. செ. சஞ்சீவன். | 2D 5C 2S | (பரியோவான் கல்லூரி) |
| 13. ஸ். டிஷாந்தன். | 2D 4C 3S | (யா/கனகரத்தினம் ம.ம.வி.) |
| 14. ஏ. கௌசிகா. | 2D 4C 3S | (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) |
| 15. யோ. தயாநந்தன். | 2D 2C 4S | (யா/கனகரத்தினம் ம.ம.வி.) |
| 16. துஸந்தி | D 8C S | (யா/கனகரத்தினம் ம.ம.வி.) |
| 17. பு. துஷிதா. | D 6C 2S | (யா/கனகரத்தினம் ம.ம.வி.) |
| 18. தி. துஷாயினி. | D 6C 2S | (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) |
| 19. ஞா. பிரசாத். | D 5C 2S | (யா/கனகரத்தினம் ம.ம.வி.) |
| 20. ஜெ. மகிந்தன். | D 3C 4S | (யா/கனகரத்தினம் ம.ம.வி.) |
| 21. த. கஜேன் | 9C | (சென். பற்றிக்ஸ் கல்லூரி) |

* இவர்களுக்கு எமது பாராட்டுகளைத் தெரிவிப்பதுடன் இப்பெறுபேறுகளுக்கு காரணமான திறமை மிக்க ஆசிரிய குழாமுக்கும் எமது பாராட்டுகள்.

* இம்முறையும் வழமைபோல் கிழமையில் ஆறு கணித வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

* கணித பாடத்தில் அனைவரும் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிர்வாகி,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(C/11958)



நினைவிருக்கட்டும்

உடற்கல்வி மாணவர் மன்ற வளர்ச்சி
நிதிக்காக
வரலாற்றுப் புகழ்மிக்க
யாழ். பல்கலைக்கழக கலைஞர்கள்
இணைந்து வழங்கும்
மாபெரும்
இன்னிசை வார்ப்புகள்
இன்னிசை நிகழ்ச்சி

29-04-2000 பி.ப. 1.30 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி.
07-05-2000 பி.ப. 1.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய திறந்தவெளி அரங்கு.
21-05-2000 பி.ப. 1.30 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு.

அன்பளிப்பு: 50/=, 100/=

அனுமதிச் சீட்டைகளை மண்டப வாயில்களில் பெற்றுக் கொள்ளலாம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:-
ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் நிகழ்ச்சியை நடத்த முடியாமல் போய்விட்டதையிட்டு மனம் வருந்துகின்றோம்.

உடற் கல்வி மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(75764)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26-04-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.